# இன்றைய சிறுவர் நாளைய உலகம்



(ES)
62.7
IV

ஆண்டி மணியம்

1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERADENIYA
29 SEP 2008
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
29 SEP 2008
LIBRARY
615054
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சிறுவர் நாளைய உலகம்




UNIVERSITY OF PE... LIBRARY
29 SEP 2008

நிலா பதிப்பகம்
நோர்வே

615054

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முதற்பதிப்பு | 1997 ஆவணி |
| ஆசிரியர் | க.சிவசுப்பிரமணியம்<br>(ஆண்டி மணியம்)<br>மட்டக்களப்பு |
| கணனிப்பதிவு | மாலதி – தவநேசன் |
| வடிவமைப்பு | நிலா பதிப்பகம் |
| விலை | இலங் [illegible]<br>வெளிந [illegible] |

நிலா பதிப்பகம்
நோர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவரவிருக்கும் நூல்கள்

* நகரங்கள் நரகமாகின்றன
* தூக்கம் கலைந்த சீனம்
* வறுமைக்கு வறுமை வருமா?
* பெண்கள் முன்னுரிமைக்குரியவர்கள்
* இனத்துவப்போராட்டங்கள்
* மானிடமூலவளம்- இலங்கைக்கான வெட்டுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இருபதாம் நூற்றாண்டு முடிய இன்னும் இரண்டு வருடங்களும் சில மாதங்களுமே உள்ளன.இருபத்தி ஒராம் நூற்றாண்டின் நுழைவாயிலை நெருங்கிவிட்டது மனிதகுலம். இருபதாம் நூற்றாண்டின் பலகால கட்டங்களை வரலாற்றாசிரியர்களும் சமூக அரசியல் சிந்தனையாளர்களும் பல விதமாக வர்ணித்துள்ளார்கள். சோசலிசப் புரட்சிகளினதும் தேசியவிடுதலைப் போராட்டங்களினதும் நூற்றாண்டென இடதுசாரிகளால் ஒருகாலத்தில் கருதப்பட்டது இந்த நூற்றாண்டு. முதலாளித்துவமும் லிபரல் ஜனநாயகமும் இறுதி வெற்றி பெற்ற நூற்றாண்டு இது என பலராலும் இப்போது கருதப்படுகிறது. ஆயினும் பிரபல்யம் வாய்ந்த சமூக விஞ்ஞானிகள் பலர் இந்த நூற்றாண்டு மனித வரலாற்றிலேயே மிகக் கொடிய வன்முறைகளையும் இயற்கை அழிப்புக்களையும் கண்ட ஒரு காலவெளி எனக் கூறுகிறார்கள். இப்படிச் சொல்வது இருபதாம் நூற்றாண்டு மனிதகுலத்திற்கு எதுவித நன்மைகளையும் தரவில்லை என்பதாகாது. பல நல்ல விளைவுகளைப் பட்டியல் போட்டுக் காட்டலாம். பல விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகளைச் சுட்டிக்காட்டி பலரும் பெருமிதம் அடையலாம். ஆனால் இன்று எல்லாவற்றையும் உலக சனத்தொகையின் ஒரு சிறுபான்மை அடைவதற்கு முழு மனிதகுலமும் இயற்கையும் அனுபவித்த இழப்புக்களோ எண்ணற்றவை எனலாம்.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப்பின் உள்நாட்டு யுத்தங்களாலும் பஞ்சத்தாலும் வரட்சியாலும் கோடிக் கணக்கானோர் உயிர் இழந்துள்ளனர். அகதிகளாகவும் அநாதைகளாகவும் மாறியோர் தொகையும் அத்தகையதே. இப்போதெல்லாம் சிறுவர்கள் ஆயுதமேந்தி யுத்தங்களில் பங்குபற்றுதல் சகஜமாகிவிட்டது. நவீன தொடர்பு சாதனங்களை தமது நலன்களுக்குச் சேவை செய்ய ஏகாதிபத்திய வல்லரசுகளும் பல நாடுகளின் ஆட்சியாளர்களும் அமர்த்தியுள்ள காலம் இது. பொய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சாரங்களை நம்ப வைக்க தொலைக்காட்சி மிகவும் நுட்பமாகப் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய பொய்மை இப்போது ஆட்சி நடத்துவோருக்கும் அவர்களை எதிர்க்கும் பல அமைப்புக்களுக்கும் ஒரு பொதுவான நடைமுறையாகவும் மாறி வருகிறது. பல சந்தர்ப்பங்களில் போராட்டங்கள் பொதுமக்களை ஊமைகளாக்கி விடுகின்றன. அது மட்டுமன்று 'மூன்றாம் உலகம்' எனப்படும் நாடுகளில் மனித உயிரின் பெறுமதி அற்பமாகிவிட்டது.

மானிடம் தோற்றுவிட்டதா? என்ற கேள்வி நியாயமானதே. இங்கு பிரசுரமாகும் ஆண்டி மணியத்தின் கட்டுரையில் இக்கேள்வி இழையோடுகிறது. கட்டுரை சிறுவர்கள் பற்றியது. இத்தகைய ஒரு விடயத்தை தேர்ந்தெடுத்த ஆண்டி மணியத்தை நான் பாராட்டுகிறேன். ஏனெனில் இன்றைய சிறுவர்களின் நிலைமைகளே நாளைய உலகின் தன்மைகளை மிக தெளிவாகக் காட்டவல்லவை. 'மூர்க்கமான போராளி' 'வேண்டாத பெண் குழந்தை' 'சந்தை விலையில் சிறுவர்' 'பாலியல் இம்சைகள்' 'உழைக்கும் சிறார்கள்' 'ஆரோக்கியமற்ற சந்ததி' இந்த உப தலைப்புக்கள் கட்டுரையின் உள்ளடக்கங்களைப் பறை சாற்றுகின்றன. இந்தியாவிலும் சீனாவிலும் பெண் குழந்தையை வேண்டா வெறுக்கும் பெற்றோர்கள் பெருந்தொகையினர். கருச்சிதைவினால் மட்டுமல்ல குடும்பங்களின் உள்ளார்ந்த உணவுப்பங்கீட்டின் பாதகமான விளைவுகளால் பாதிப்படையும்,உயிரிழக்கும் பெண்களின் தொகை கணிசமானது. இப்போது அடக்குமுறை ஆட்சிகளின் நடவடிக்கைகளால் காணாமல் போவோர் பற்றிய தகவல்கள் நன்கு வெளிவருகின்றன. இத்தகைய மறைவுகளுக்கெதிராக உலகளாவிய எதிர்ப்பும் வளர்கிறது. ஆனால் பெற்றோரின் நேரடியான மறைமுகமான செயற்பாடுகளால் மறையும் பெண் குழந்தைகள் பற்றிய தகவல்கள் பலருக்குத் தெரியாது. பெண்கருச்சிதைவும் பெண் குழந்தைகளுக்கெதிரான பாகுபாடும் சமூகப் பிரச்சனைகள் என்பது உண்மை. ஆனால் இவை ஆசியாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(குறிப்பாக இந்தியா சீனா) இருபத்தி ஒராம் நூற்றாண்டிலும் தொடரும் என எதிர்ப்பார்க்கலாம்.

இவை மட்டுமல்ல ஆண்டி மணியம் அலசி ஆராயும் மற்ற பிரச்சனைகளும்தான். இங்கு அவர் தரும் புள்ளி விபரங்களும் எழுப்பும் கேள்விகளும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. உதாரணமாக பல ஆசிய நாடுகள் பெற்றுவரும் துரித அபிவிருத்தியினால் சிறு தொகையினரான செல்வந்தர்களே பெரும்பாங்கான பயன்களைப் பெறுகிறார்கள் எனச் சுட்டிக்காட்டுகிறார். எனது அபிப்பிராயத்தில் இந்தப் பிரச்சனை இன்றைய சீனாவையும் இந்தியாவையும் மிகப்பாரதூரமாகப் பாதிக்கிறது. இவ்விரு நாடுகளும் ஏறக்குறைய 2 பில்லியன் மக்களை கொண்டுள்ளன. இது உலக சனத்தொகையின் 40 வீதத்திற்கும் மேலானது. இவ்விரு நாடுகளிலும் வேலையற்றோர், நிலமற்றோர், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவல்ல வருமானமற்றோர் தொகை அதிகரித்துள்ளது. இதனால் பெருந்தொகையான சிறுவர்கள் எதிர்காலமின்றி வாழும் நிலையிலுள்ளோர்கள். இன்னொருபுறம் தெற்காசிய நாடுகளில் பாலர்கள் மீது வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் பாலியல் வன்முறைகளைச் செய்வது அதிகரித்து வருகிறது. பாலர் வகுப்பிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் கல்வி பயில வேண்டிய சிறுவர்கள் ஆயுதப்போராளிகளாகி தாம் சிறுவர்களாக வாழ வேண்டிய வாழ்க்கையை இழந்து நிற்கிறார்கள். இவையெல்லாம் மனிதனின் மிக அடிப்படையான இருப்புச் சார்ந்த உரிமை மீறல்களே. இத்தகைய பிரச்சனைகளின் பரிமாணங்களை விளக்க முற்படும் ஆண்டி மணியத்தின் கருத்துக்கள் 'அபிவிருத்தி' எனும் கோட்பாட்டையே கேள்விக் குள்ளாக்குகிறது. கடந்த 40, 50 வருடங்களாக 'அபிவிருத்தி' எனும் பெயரில் தெற்காசிய நாடுகளில் என்ன இடம் பெற்றுள்ளது. இந்த அபிவிருத்தியினால் இருந்ததையும் இழந்தவர்களுக்கு எப்போது விமோசனம்? சுருங்கச் சொல்லின் ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் அபிவிருத்தியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் சிறுவர்களும் பெண்களும் வயோதிபர்களும் அனுபவிக்கும் மனித நலனை வைத்தே மதிப்பிடவேண்டும். சிறுவரின் மனிதநலன் எனும்போது அவர்கள் தாயின் வயிற்றிலிருக்கும் போதும் பின்னர் குழந்தைகளாயிருக்கும்போது அனுபவிக்கும் உரிமைகள் வாழ்க்கை வசதிகள் சுகாதார வசதிகள் கல்வி பெறும் சந்தர்ப்பங்கள் சமூகத்தில் இன,மத,நிற,பால் அடிப்படையில் பாரபட்சமின்றி நடத்தப்படுதல் போன்றவற்றைக் குறிக்கும். அபிவிருத்தி மனிதனின் ஆற்றல்களை வளர்க்கவும் அவர்கள் அனுபவிக்க விரும்பும் இருப்புக்களை சமூக விரோத வழிகளைத் தவிர்த்துப் பெற்று அனுபவிக்கவும் உதவ வேண்டும். ஆகவே அபிவிருத்தி ஒரு தன்மைரீதியான படிமப்போக்கு. பொருளாதார வளர்ச்சி மட்டும் அபிவிருத்தியாகிவிடாது. அது மனிதர் தாம் விரும்பும் இருப்புக்களை அடைய உதவும் பொருட்களையும் வருமானத்தையும் அறிவுரீதியில் பெருக்குகிறது. வருமானம் குறைந்த பெற்றோர்களின் பிள்ளைகளின் பயனுள்ள சமூக நகர்ச்சி உதவக்கூடிய அரசியல் பொருளாதார அமைப்பின் அவசியத்தை இங்கு சுட்டிக்காட்டத்தேவையில்லை யாயினும் அதுவே இன்று பல நாடுகளின் அடிப்படைப் பிரச்சனையாயிருப்பது மறந்து மேலெழுந்தவாரியாக உரிமைக் கோஷங்கள் போடுவதில் பயனில்லை. இதையே ஆண்டி மணியத்தின் கட்டுரையும் வெளிப்படுத்துகிறது.முறையான மாற்றமின்றி விடிவில்லை என்பதே இந்த நூலின் முடிவாகும். நூலாசிரியருக்கு என் அன்பும் ஆசிகளும்.

சமுத்திரன்
ஒஸ் நோர்வே
6 ஆவணி 1997

29 SEP 2008
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் அடுத்த வெளியீடு

# மாசடையும் சூழல்

நிலா பதிப்பகம்
நோர்வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சிறுவர் - நாளைய உலகம்

சிறுவர்கள் - குறிப்பாக ஐந்து வயதிற்குட்பட்டவர்கள், தமது உள வளர்ச்சிக்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் தேவையானவற்றைக் கேட்டுப் பெறத் தெரியாதவர்கள். ஆட்சியாளர்களும் அரசியல் தலைவர்களும் தமக்கு எதிராக மேற்கொள்ளும் கொடுமைகளையும் பாரபட்சங் களையும் தட்டிக்கேட்க முடியாதவர்கள். தம்மைக் கொடுமைப்படுத்தும் மனிதாபிமானமற்ற அராஜகவாதிகளிட மிருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்ள வலுவற்றவர்கள். தம்மைப் பாதிக்கும் சீர்கெட்ட சமூக நடைமுறைகளைத் தடுத்து நிறுத்தச்சக்தி இல்லாதவர்கள். தம்பால் அன்பையும் கருணையையும் காட்ட வேண்டிய பெற்றோரும் பாதுகாவலருமே தமது எதிர்கால வாழ்வு முழுவதும் சீரழிந்து போவதற்குக் காரணமாக அமைவதைப் பார்த்துக்கொண்டும் வாய்மூடி மௌனிகளாக் நிற்பவர்கள்.

தமது எதிர்கால வளமான வாழ்விற்கு உறுதுணையாக அமைய வேண்டிய இச்சிறியபுவியின் சூழலைத் தம் சுயநல இச்சைகளுக்காக மாசாக்கிவரும் கல்நெஞ்சக்காரர் களின் செயல்களுக்கு மாற்றுவழியைத் தேடிக்கொள்ளத் தெரியாதவர்கள், உலகளாவிய தங்களின் சகாக்கள்படும் துன்பங்களையும் துயரங்களையும் அவலங்களையும் ஒன்று திரண்டு துடைத்தெறிவதற்கு எவ்வித மார்க்கத்தையும் தெரிவு செய்ய வழியற்றவர்கள். இன்று தமது உரிமைகள் எல்லாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாகப் பறிகொடுத்துவிட்டு அற்பசலுகைகளிற்காக ஆட்சியாளர்களிடமும் அதிகார வர்க்கத்திடமும் கையேந்தி நிற்கின்றார்கள். பெற்றோரும் பாதுகாவலருமே சிறுவர்களின் அடிப்படை உரிமை எது சலுகை எது என்ற பேதம் புரியாமல் குழம்பிப்போய் உள்ளார்கள்.

## மூர்க்கமான போராளி

அவனது வயது பன்னிரண்டு. லைபீரியாவின் தேசிய விடுதலை முன்னணியில் இணைந்து துப்பாக்கியேந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது வயது எட்டு, நான்கு அடி உயரமான மெலிதான உடம்பு, சிவப்பு நிற அரைக்கை சேட், கறுப்புநிற அரைக்காற்சட்டை, கால்களில் சப்பாத்து, ஒரு ஏ.கே 47 ரகத்துப்பாக்கியைக் கையாளும் திறன் அவனிடம் இருக்குமென எம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை, இரத்தம் குடிக்கும் கொலை வெறியன் போலன்றி பாடசாலையின் கலகக்காரன் போன்ற தோற்றம், தனக்கு ஒரு வேளை உணவு அளிக்கவில்லை என்பதற்காக அப்பெண்ணை எவ்வித தயக்கமுமின்றியே சுட்டுக்கொல்லும் நெஞ்சளுத்தம் மிக்கவன், சென்ற ஆண்டு ஐக்கிய நாடுகள் சமாதானக்குழுவிடம் ஆயுதங்களை ஒப்படைத்துச் சரணடைந்த போது தனக்களிக்கப்பட்ட பத்திரங்களை வாசிக்கவோ அவற்றில் ஒப்பமிடவோ தெரியாதவன், அவன் தான் லைபீரியா தேசிய விடுதலை முன்னணியின் காப்டன் புல்.

வளர்முக நாடுகள் எங்குமே இத்தகைய சிறுவர்கள் தோள்களில் எறிகுண்டு ஏவுகணைகளையும், ஏ.கே.47 ரக துப்பாக்கிகளையும் ஏத்திய வண்ணம் மனித உயிர்களை வேட்டையாடி வருவதை எம்மாற் காணமுடிகின்றது.மத்திய ஆசிய நாடுகளின் இனத்துவ ஆயுதக் குழுக்களும், ஆபிரிக்க நாடுகளின் காடுகளிலுள்ள போட்டிக் குழுக்களும் ஏராளமான அப்பாவிச்சிறுவர்களை ஆயதபாணிகளாக்கி யுள்ளன. ஏடும் எழுத்தாணியும் கொண்டு பாடசாலை சென்று அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டிய இப்பாலகர்களை, வளர்முக நாடுகளின் அரசுகள் கடைப்பிடிக்கும் சிறுபான்மையோர் மீதான பாரபட்ச நடவடிக்கைகளும், அடக்குமுறைகளும், கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதமுமே ஆயுதம் ஏந்த வழிவகுத்துள்ளன.

குடித்தொகை அமைப்பில் சிறுவர்களின் சதவீதம் அதிகமாக இருப்பதும்,தற்போது பரவலாகப்பாவனையிலுள்ள சக்திமிக்கஆயுதங்களின் கையாழ்வதற்கான தொழில்நுட்பம் இலகுவானதாக இருப்பதும், எத்தகைய அழிவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலும் செல்வம் சேர்த்துவிட முனையும் தொழில்மய நாடுகளின் எல்லை கடந்த ஆயுதஉற்பத்தியும் சிறுவர் தொகை போர் முனைகளில் பெருகக் காரணங்களாகின்றன. "சிறுவர்களே இன்று மிகவும் மூர்க்கமான போராளிகளாக உள்ளார்கள். தமது செயல்களின் விளைவுகள் பற்றிய நீதியின் பாற்பட்ட சிந்தனைகள் அவர்களிடம் இல்லை. ஒன்றைச் செய்யுமாறு அவர்களைப் பணித்தால் உடனடியாகவே அதனை மிகவும் நேர்த்தியான முறையில் நிறைவேற்றிவிடும் இயல்பு கொண்டவர்கள்" என்கிறார் ஈஸ்தர் குளுமா என்ற சிறுவர் புனர்வாழ்வுத் தலைவர்.

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கப் பிராந்தியங்களில் பல தசாப்தகாலமாகத் தொடரும் யுத்தமும், கைத்தொழிற் துறை வளர்ச்சியும், நகரவாக்கமும், பெருந்தொகையான குடிப்பெயர்வும் பழமைமிக்க சமூக அமைப்பையெல்லாம் அரித்தும் சிதைத்தும் விட்டது. "இஸ்ரேலியர்களுக்கு எதிராக என் உடலில் வெடி மருந்தை சுமந்து சென்று தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது ஆசை. எனக்கு 20 வயது ஆகும்வரை இன்னும் ஒன்பதாண்டுகள் இதற்காகக் காத்திருக்க வேண்டியுள்ளதே என்றுதான் நான் வேதனைப்படுகின்றேன்'' என்கிறான் போராளியான றஉறாப்.

உலகம் முழுவதும் 200,000ற்கு மேற்பட்ட சிறுவர்கள் இயக்கங்களிலும் ஆயுதக் குழுக்களிலும் உள்ளதாக இன்று மதிப்பிடப்பட்டுள்ளது. லைபீரியாவில் மட்டுமே 6000ற்கு மேற்பட்ட சிறுவர்களும், மொஸாம்பிக் சிவில் யுத்தத்தில் 5000 சிறுவர்களும், கௌதமாலாவில் 7500 சிறுவர்களும், மியான்மரில் ஆறு ஆயுதக்குழுக்களிலும் 15,000 ற்கு மேற்பட்ட சிறுவர்களும் உள்ளதாகக் கூறப்படுகின்றது. பேரு, கொலம்பியா, ஈக்குவடோர், கம்போடியா, லாவோஸ், மியான்மர் போன்ற நாடுகளிலுள்ள போதைப்பொருள் உற்பத்திப் பகுதிகளில் ஏராளமான சிறார்கள் நவீன ரக ஆயுதங்களுடன் காவற் கடமையில் உள்ளமையை எம்மாற் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களின் மன உறுதியைப் பரிசோதிக்க மிக நெருங்கிய உறவினர்களையே கொலை செய்யத் தூண்டுவதும், தமது பெற்றோரின் வீடுகளையே தீக்கிரையாக்கச் செய்வதும், போருக்குச் செல்லுமுன் போதை மருந்துகளையும் மனித இரத்தத்தையும் அருந்துவதும் போன்ற கொடுமைகளிற்கு உள்ளாகிய இச்சிறுவர்கள், போர் ஓய்ந்த பின்னர் தமது சமுதாயத்தில் இணைந்து வாழ முடியுமா என்ற சந்தேகத்தை எமக்கு ஏற்படுத்துகின்றது.

## தம்மைத்தாமே ஏமாற்றும் அரசுகள்

ஜெனிவா உடன்படிக்கையும், ஐக்கிய நாடுகள் சபையின் 176 நாடுகளின் அங்கீகாரம் பெற்ற சிறுவர் உரிமைகள் பிரகடனமும் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களை ஆயுதப்படைகளில் சேர்த்துக் கொள்வதைத் தடை செய்த போதிலும் நடைமுறை வாழ்வில் இவை அமுல்படுத்தப் படுவதை எம்மால் அவதானிக்க முடியவில்லை. பயங்கரவாதிகளையும் ஆயுதபாணிகளையும் தேடி அழிக்கும் முயற்சியென வெளி உலகிற்குக் கூறிக்கொண்டு கிராமங்களைச் சுற்றிவளைத்து அகப்படும் சிறுவர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளும் கைங்கரியத்தை அங்கோலா, சூடான், ருவண்டா, சீராலியோன், ஈராக், ஈரான், ஆப்கானிஸ்தான், மியான்மர், கம்போடியா, எல்சல்வடோர், கௌதமாலா, மெக்ஸிக்கோ போன்ற ஏராளமான வளர்முக நாடுகள் எந்தவிதத்தயக்கமுமின்றியே செய்து வருகின்றன.

இன்று உலகில் இடம் பெற்றுவரும் 24ற்கு மேற்பட்ட மோதல்களில் 50,000ற்கு அதிகமான சிறுவர்கள் அரச தரப்பில் பங்கேற்று வருவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். எண்பதுகளின் ஆரம்பத்தில் எல்சல்வடோர், நிக்கரகுவா, கௌதமாலாவில் இடம் பெற்ற ஆயுத மோதல்களின் போதும், பிற்பகுதியில் ஈராக்-ஈரான் யுத்தத்தின் போதும் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் கொலையுண்டார்கள் என்பதை எம்மால் அறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாத்காரத்தினால் இராணுவங்களில் சேர்த்துக்கொள்ளப் படுவதைவிட, குடும்பங்களில் நிலவும் வறுமை காரணமாகத் தமது உயிரைப்பணயமாக வைப்பவர்களும் பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட தன் பெற்றோருக்கும் சகோதரர்களிற்கும் வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் துடிப்பவர்களுமே பெருமளவில் ஆயுதம் ஏந்துகின்றார்கள்.

கடந்த பத்தாண்டுகளிலும் உலகம் முழுவதிலும் இடம் பெற்ற 103 ஆயுத மோதல்களிலும் 900,000 மேற்பட்ட சிறுவர்கள் மாண்டுவிட்டதாகக் கணிப்படப்படுகின்றது. மேலும் இதே எண்ணிக்கையிலான சிறுவர்கள் உடல் அங்கவீனமுற்றும், உளப்பாதிப்புற்றும் இன்று சாதாரண வாழ்வு வாழ முடியாது தவிக்கின்றார்கள். யப்பான், 15 வயதிற்கு மேற்பட்டோரையும் ஐக்கிய இராச்சியம், ஐக்கியஅமெரிக்கா, நியூசிலாந்து, நெதர்லாந்து, பிரான்ஸ் என்பன 16 வயதினரையும், பாகிஸ்தான், ஒஸ்ரியா என்பன 17 வயதினரையும் சட்டப்படி இராணுவத்தில் சேர்த்துக் கொள்கின்றன. இவ் வயதெல்லை உலக நாடுகள் அனைத்திற்கும் பொதுவான ஒன்றாகவும், உயர்வாக அமையாமையுமே சிறுவர் சாசனம் பலமிழக்கக் காரணமாகும்.

## வேண்டாத பெண் குழந்தை

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் ஏழை விவசாயியின் குடிசையிற் பிறந்த பெண்குழந்தை மருத்துவமாதினாலேயே கழுத்து நெரிக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றது. பாலைநிலப் பிரதேசமான இராஜஸ்தானில் பிறக்கும் பெண் குழத்தை சுடுமணலில் உயிருடன் குழிதோண்டிப்புதைக்கப்படுகின்றது. மத்தியபிரதேசத்தில் பெண் குழத்தையின் தொண்டைக்குள் புகையிலையைத் திணித்து சுவாசத்தைத் தடை செய்து கொல்லுகிறார்கள், பெருமை மிகு தமிழ்நாட்டில் பிறந்த பெண் குழத்தையை நாயும் பூனையும் உண்பதற்குக் குப்பைத் தொட்டிகளில் எறிகின்றார்கள், சீனப்பெருநாட்டில் பிறந்த பெண்குழந்தையை அனாதை இல்லங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் வீசிவிட்டுச் செல்கின்றார்கள், தென்கொரியாவில் கர்ப்பத்திலுள்ள குழந்தையின் பாலப்பகுப்பைக் காட்டும் தொழில்நுட்பக் கருவியின் துணையுடன் பெண் குழந்தை எனக் கண்டறிந்ததும் கருக்கலைப்புச் செய்யப்படுகின்றது.

இவ்வாறான கொடுமைகள் ஆசிய நாடுகள் எங்குமே பரவலாகக் காணப்படுகின்றது. தொழில் புரியும் இடங்களில் தேவையான உரிமைகளும் சலுகைகளும், குடும்பங்களில் தாமாக முடிவெடுக்கும் சுதந்திரம், சமூகத்தில் சமத்துவம், சட்டத்தின் முன்னால் தமக்குள்ள சமவாய்ப்பு என்றெல்லாம் குரல் கொடுக்கும் பெண் உரிமைவாதிகள், மில்லியன் எண்ணிக்கையிலான பெண் குழந்தைகள் கொலை செய்யப்படுவதையும், கருவிலேயே அழிக்கப்படுவதையும், அனாதைகளாக வீசப்படுவதையும் பார்த்துக்கொண்டும் மௌனமாகவே இருக்கின்றார்கள்.

உலகின் மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதத்தைக் கொண்டுள்ள இரு பெரும் நாடுகளான சீனாவும் இந்தியாவும் இன்று 1,114.5 மில்லியன் எண்ணிக்கையிலான ஆண்களும் பதிலாக 1,054.4 மில்லியன் பெண்களையே உடையதாக 60.1 மில்லியன் குறைந்தளவு பெண்களுடன் விளங்குகின்றன. இவ்வாறான பெண் குழந்தைகளின் கொலைகள் நிறுத்தப்படாவிட்டால் ஆசிய நாடுகளின் குடித்தொகை, சமூக பொருளாதார அமைப்பிலே மிகவும் அபாயகரமான விளைவுகள் தோற்றம் பெறும் என அஞ்சப்படுகின்றது. தொழில்மய நாடுகளில் 100 ஆண்களுக்கு 104 பெண்கள் என்ற விகிதத்திலே பிறப்பு எண்ணிக்கை உள்ளதாகத் தரவுகள் காட்டுகின்றன.

## கருச்சிதைவு பெருகிறது

'இன்று பத்து டொலர்கள் செலவிடுங்கள், நாளை இரண்டாயிரம் டொலர்களை உங்கள் சேமிப்பாகப் பெறுவீர்கள்.' வளம் மிகுந்த பஞ்சாப்பின் நவீன தொழில்நுட்ப சாதனங்களுடன் கூடிய மருத்துவமனையின் முன்னாலுள்ள மக்களைக்கவரும் கவர்ச்சி கரமான வாசகம் இது. "பம்பாயில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுமட்டும் மேற்கொள்ளப்பட்ட 8,000 கருக்கலைப்புகளில் 7,999ம் பெண் குழந்தைகளே" என்கிறார் டாக்டர்வினா மஜூம்தர். "எனது கணவர்தான் நாங்கள் என்ன குழந்தையை எப்போது வளர்க்க வேண்டும் என்று தீர்மானிக்கவேண்டும்" என்கிறார் தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண்மணி ஒருவர்.உங்களுக்கு மனையாளாகக் கறுப்பினப் பெண்களையா இறக்குமதி செய்ய விரும்புகின்றீர்கள்?" என்கின்றன தென் கொரியச் சுவர் விளம்பரங்கள்.

சோவியத் ஒன்றியத்தின் சிதைவுடன் தனியரசுகளான மத்திய ஆசிய நாடுகளில் இரண்டு குழந்தைகளைக் கொண்ட ஒரு தாய் தனது வாழ்நாளில் சராசரியாக நான்கு கருக்கலைப்புக்களைச் சந்திக்கின்றாள், ஆண்டுக்கு மூன்று கருச்சிதைவுகளை மேற்கொண்ட ஏராளமான பெண்களை மொஸ்கோவில் இருந்து நூறு கிலோ மீற்றர் களுக்குள்ளேயே காணமுடிகின்றது. எமக்குப்பிள்ளைகள் இனிப் போதும் என்ற தாய்மாரும், பெண் குழந்தை எமக்கு வேண்டியதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்ட ஏழைப்பெற்றோரும், மணம் செய்யாமலேயே தவறான நடத்தைகளால் கர்ப்பமுற்ற பெண்களுமே இத்தகைய கருச்சிதைவுகளுக்கும், குழந்தைக்கொலைகளுக்கும் காரண மாகின்றார்கள். இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு 6 மில்லியன் கருச்சிதைவுகள் இடம்பெறுவதாகவும் இவற்றில் 90 சதவீதத்திற்கும் மேற்பட்டவை சட்டவிதிகளுக்கு முரண்பட்டவை எனவும் நியூஸ்வீக் சஞ்சிகை கூறுகின்றது. உலகம் முழுவதும் ஆண்டொன்றிற்கு 0.5 மில்லியன் பெண்கள் அபாயகரமான முறைகளைக் கையாண்டு கருக்கலைப்பைத் தாமே மேற்கொள்வதனால் மாண்டு வருகின்றார்கள் என ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியம் மதிப்பிட்டுள்ளது.

## சந்தைவிலையில் சிறுவர்

நகர்புறங்களில் உள்ள பெற்றோர் ஒரு பிள்ளையும் கிராமப்புறக் குடும்பங்கள் இரண்டு பிள்ளைகளையும் மட்டுமே கொண்டிருக்க வேண்டும் என்ற 1973ம் ஆண்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனக் கட்டுப்பாடு கர்ப்பத்தடை சாதனங்களைச் சீராகப் பெற முடியாத நிலையிலே, பெண் குழந்தைகளுக்கு நிறைவேற்றப்பட்ட மரணதண்டனையாகக் கருச்சிதைவையும் ஆயுள்தண்டனையாக அனாதை அந்தஸ்தையுமே வழங்குவதாக அமைந்தது. தொழில் செய்து வருமானம் தேடுபவர்களாகவும், வயல்களில் தமக்கு உதவியாக உழைப்பவர்களாகவும், தமது வயோதிப காலத்தில் உதவுபவர்களாகவும், இளைஞரானபோது வீட்டுவேலைக்குப் பெண்ணையும், சீதனம் என்ற பெயரில் செல்வத்தையும் கொண்டு வருபவர்களாகவும் பையன்கள் கருதப்பட்டமையே பெண் குழந்தைகளின் கொலைகளுக்கெல்லாம் காரணமா கின்றன.

சீன அரசு தனது பராமரிப்பிலுள்ள 900ற்கு மேற்பட்ட அனாதை இல்லங்களிலுள்ள சிறுவர்களை ஐக்கிய அமெரிக்காவிலும் பிற தொழில்மய நாடுகளிலுமுள்ள பிள்ளைகளற்ற பெற்றோருக்கு 3,000 டொலர்கள் முதல் 5,000 டொலர்கள் வரை விற்று ஆண்டுக்கு 15 மில்லியன் டொலர்களை அன்னிய செலவாணியாகப் பெற்று வருகின்றது. வியட்னாமிய எல்லைப்புறக் கிராமங்களிலுள்ள வறுமைப்பட்ட குடும்பத்துப் பெண்களைச் சீனத்து வாலிபர்கள் பணத்திற்குக் கொள்வனவு செய்து மணமுடித்துக் கொள்வது சாதரண நிகழ்வுகளாக மாறிவிட்டதை இரு நாட்டு அரசகளுமே ஏற்றுக் கொண்டுள்ளன. 1500 டொலர்கள் செலவு செய்து ஒரு பெண்ணை சம்பிரதாயப்படி முடிப்பதைவிட, 250 டொலர்களுக்கு ஒரு பெண்ணை விலை கொடுத்துக் கொள்வனவு செய்வது சீன வாலிபர்களுக்கு லாபகரமானதாகவே தோன்றுகின்றது. ஆனால் விலை கொடுத்து வாங்கப்பட்ட பெண்ணை தாம் அனுபவித்ததன் பின்னர், விலைமகள் வாழ்க்கைக்குத் தள்ளிவிடும் சம்பவங்களும் பெருமளவில் இடம் பெறவே செய்கின்றது.

தெற்காசியா, ஆபிரிக்கா நாட்டுச் சிறுவர்களைக்கடத்திச் சென்று மத்திய கிழக்கு நாடுகளிலும், தொழில்மய நாடுகளில் வீட்டுவேலைக்கும், பண்ணைத்தொழிலுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்றுவரும் கொள்ளைக் கூட்டங்கள் உலக நாடுகள் அனைத்திலுமே தனது வலைப்பின்னல் சாம்ராஜ்ஜியத்தை நடத்தி வருகின்றன.அன்பையும் கருணையையும் பொழியும் தமது தாய் தந்தையரைப் பிரிந்து, புகுந்த நாட்டின் சூழலுக்கேற்ப தம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ள முடியாமலும், பூரணமான உடல் உள வளர்ச்சியை எட்டமுடியாமலும் அல்லலுறும் இச்சிறுவர்களிற்கு விமோசனம் தேடிக்கொடுக்க முடியாமல் நாடுகள் பலவும் தடுமாறுகின்றன.

## பாலியல் இம்சைகள்

“எனக்கு வயது 14. நான் அவரை நம்பினேன். என்னைவிட வயது அதிகமானவர் எனினும் என்னை நன்கு பாதுகாப்பார், மனதுக்கு அமைதியைத்தருவார், நல்லதையெல்லாம் எனக்குக் கற்றுத்தருவார் என நம்பிக்கை கொண்டேன். நான் கர்ப்பமுற்றதை அறிந்த என் வளர்ப்புத் தந்தை என்னை விரட்டியபோது அவரைத் தேடி அவர் இருப்பிடம் சென்றேன். அங்கே நான் கண்டது அவரது மனைவியையும் ஆறு குழந்தைகளையுமே. இன்று நான் நியூயோர்க்கில் உள்ள அனாதைகள் தரிப்பிடத்தில் உறுப்பினர். நானும் என் வாழ்வைப்பறிகொடுத்து எனது பிறக்கப்போகும் குழந்தைக்கும் அழிவைத்தேடிவிட்டேன்” என்கிறார் சார்வெற்றி. வாசிங்டனில் 525 மணமாகாத தாய்மார்களிடம் மேற்கொண்ட ஆய்வின்படி 63 சத வீமானவர்கள் கற்பழிக்கப்பட்டே தாய்மை அடைந்த வர்கள் என்ற உண்மை அறியவந்தது.

வயது வந்த பெண்பிள்ளைகளை வைத்துப் பராமரிப்பது தம்மீது சுமத்தப்பட்ட ஓர் பாரம் எனக் கருதுகின்ற வறுமை வசப்பட்ட பெற்றோர்கள், அவளை மணமுடித்து வைத்து எப்போ வீட்டை விட்டு விரட்டலாமென பூப்படையும் காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்ற நிலமை லத்தீன் அமெரிக்க நாடுகளில் பரவலாகவே காணப்படு கின்றது. பேரு, ஈக்குவாட்டோர், டொமினிக்கன், கொலம்பியா, பிறேசில் போன்ற நாடுகளில் கருத்தரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களில் 12 சதவீதத்திற்கும் மேலானவர்கள் 15 வயதிற்குட்பட்டவர்களாக அமைய இவ்வாறான இளமைக் கால மண வாழ்வே காரணமாகின்றது.

தெற்கு ஆசிய நாடுகளிலும் இத்தகைய இளமைக்கால மணவாழ்வும் பாலியத் திருமணங்களும் பெருமளவில் இடம் பெற்றுவருவதை நாம் அறிவோம். இராஜஸ்தான் மாநிலத்தில் மூன்று வயதுப் பையனுக்கும் ஒரு வயதுப் பெண் குழந்தைக்கும் திருமணம் செய்து வைக்கப் பெற்றோர்கள் முற்பட்டபோது, அதனைப் பொலிசாரின் துணை கொண்டு தடுத்து நிறுத்திய சமூக சேவைப் பெண்மணி ஒருவர் ஒரு மாத காலத்திற்குள் கற்பழிக்கப்பட்டது மல்லாமல் பொய்க்குற்றம் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டார். மத்திய கிழக்கு நாடுகளில் வயது முதிர்ந்துவிட்ட ஆண்களிற் பலரும், மிகச்சிறுவயதுப் பெண்களை தமது மூன்றாம் நான்காம் மனைவிகளாகப் பணம் கொடுத்து வாங்கிவிட்டு வேலைக்காரிகளாக்கி அவர்களது இயல்பான வாழ்விற்குப் பெரும் சவாலாக இருக்கிறார்கள்.

உலகம் முழுவதும் 528 மில்லியன் உல்லாசப் பிரயாணிகளைக் கொண்டு, வருமானமாக 3,400,000 மில்லியன் டொலர்களை அளிக்கின்ற பொருளாதார முதன்மை பெற்ற உல்லாசப்பயணத்துறை, மறுபுறம் வளர்முக நாடுகளிலுள்ள 10 மில்லியன் எண்ணிக்கை யினரான 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் பாலியல் சித்திரைவதைகளிற்கும் காரணமாக அமைகின்றது. மணிலா, பாங்கொக், பம்பாய், சையோபோலோ, றையோடி ஜெனறோ, புவனஸ் அயரஸ், மெக்ஸிக்கோநகர், ஹவாய் தீவுகள் போன்றன இவ்வாறான சிதைந்துபோன சிறுவர்களின் வாழ்வை எமக்குத் துலாம்பரமாகவே காட்டுகின்றன.

பெற்றோரதும் பாதுகாவலரதும் சம்மதத்துடனேயோ அல்லது பலாத்காரமாகவோ சிறுவர் சிறுமிகள் இத்தீய செயல்களுக்கும் மனிதாபிமானமற்ற சித்திரவதைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகி வருவதை பெருந்தன்மை கொண்ட பெரும் தலைவர்களும், ஜனநாயகம், தனிமனித உரிமைகள், சிறுவர் நலன்பேணல், பாலியல் துஷ்பிரயோகங்களைஒழித்தல் எனக்கூறிக்கொள்ளும் சமூகத் தலைமைகளும் பார்த்துக் கொண்டு நெட்டைமரங்களென நின்று புலம்புகின்றனவேயொழிய நடைமுறைச்சாத்தியமான எந்த வழிமுறைகளையும் கடைப்பிடிக்கத் தயங்குகின்றன.

## விபச்சாரமும் இதில் ஒன்று

மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படும் வறுமையும், வறுமைப்பட்ட நாடுகளின் வெளிநாட்டு நாணயமாற்றைத் தேடித்தரும் உல்லாசப் பயணத்துறையின் அதிவேக அதிகரிப்பும், போதைவஸ்துப் பாவனையின் உயர்வும், குடித்தொகை அதிகரிப்பின் இயற்கைச் சமநிலை சிதைவுற்றுப் பெண்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியும், ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்துவரும் குடிப்பெயர்வும் அகதிவாழ்வும் இளைஞர்கள் மத்தியில் மலிந்துவிட்ட பாலியல் பலாத்காரங்களும், இயற்கைக்கு ஒவ்வாப் பாலியல் வக்கிரங்களும், இவற்றையெல்லாம் தமக்குச் சாதகமாக்கிக்கொண்ட பணத்தாசை கொண்ட சிலரது சந்தர்ப்பவாத அணுகுமுறைகளும் பல மில்லியன் எண்ணிக்கையிலான சிறுமிகளதும் கன்னிப்பெண்களதும் வாழ்வை "விபச்சாரிகள்" என்ற நாமம் சூட்டி நடுத் தெருவில் நிறுத்தியுள்ளன.

விரல்விட்டு எண்ணக்கூடிய சில நகரங்கள் தவிர்ந்த உலகப் பெருநகர்கள் அனைத்திலுமே விபச்சாரம் கொடிகட்டிப் பறக்கிறது என்பது எந்தளவிற்கு உண்மையோ அதேயளவிற்கு எந்த ஒரு பெண்ணும் தன் சுய விருப்பத்தின் பேரில் விபச்சார வாழ்வை மேற்கொண்டது கிடையாது என்பதும் உண்மையே. விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட சிறிமிகளது நிலை பரிதாபத்திற்குரியது மட்டுமன்றி, அதைவிடக்கொடுமை இவர்கள் பெற்றெடுக்கும் பிள்ளைகள் தாம் வாழப்போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் சுமந்துநிற்கும் வடுக்களாகும். அவமானத்திற்குரிய சின்னங்களான இச் சிறுவர்களில் எவருமே பொருளாதார, சமூக வாழ்வில் பிறரைப் போல் தம்மையும் நிலை நிறுத்திகொண்டதாக வரலாறு இல்லை.

யப்பானியர் சிலர் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் நாட்டுச் சிறுமிகளை தொழில் தருவதாக ஆசை கூறி சூட்கேசு களில் அடைத்துசென்று விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதாகச் செய்திகள் வருகின்றன. சீனா, வியட்நாம் போன்ற கட்டுப்பாடு மிக்க நாடுகளிற் கூட மிகவும் அண்மைக் காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட திறந்த சந்தைப் பொருளாதாரம் மேற்குலக கலாச்சாரத்தின் ஊடுருவலுக்கு வழிவகுத்து விபச்சாரமும் பெருகிவருதாக அறிய முடிகின்றது. பிலிப்பைன்ஸ் நாட்டில் அமைந்துள்ள படைத்தளங்கள் இரண்டையும் அண்டியுள்ள பருவ வயதுப்பெண்களில் எவருமே தூய்மையான வாழ்வை அமைத்துக்கொள்ள முடியாது திண்டாடுகிறார்கள். வளர்முக நாடுகள் அனைத்திலும் பாதுகாப்பு நடவடிக்கை களின்போது முதலில் பலியாபவர்கள் சிறுவர்களும் சிறுமிகளுமே என்பது சாதாரண நிகழ்வாகவே மாறிவிட்டது. உலகில் எங்கெல்லாம் இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறுகின்றனவோ அங்கெல்லாம் சிறுவர் கொலைகளும், சிறுமிகள் கற்பழிப்புக்களும், விபச்சாரமும் பெருகிவருவது நாம் அறிந்ததே.

## உடல் உறுப்புக்குக்கொலை

மிகச் சமீப பத்தாண்டுகளில் மருத்துவத்துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வெற்றிகள் பல, தொழிற்பட முடியாத அல்லது சிதைந்துவிட்ட மனித உறுப்புக்களை அகற்றிவிட்டு மாற்றீடாக புதியனவற்றை இணைத்துக் கொள்ளும் அதிசயிக்கத்தக்க செயற்திறனை உருவாக்கி யுள்ளது. செல்வச் செழிப்பு மிக்க குறிப்பிடத்தக்க ஒரு சிறு கூட்டம் மக்களிற்கு இவை பெரும் வரப்பிரசாதமாக அமைகின்ற வேளையிலே, இவ் உடல் உறுப்புக்களை வர்த்தகப்பொருளாகவே கருதுகின்ற காட்டுமிராண்டித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனமான கொடியவர்கள் சிலர் வறிய நாடுகளில் வாழும் வறியோரிலும் வறியோரான சிறுவர்கள் பெருந்தொகை யினரைக் கடத்திச் சென்று கொலை செய்வது அதிகரித்து வருவதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. வளர்முக நாடுகளில் குறிப்பாக இந்தியா, வங்காளதேஷ், நேபாளம், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், பிறேசில் போன்ற நாடுகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக திடீர்திடீரென சிறுவர்கள் மாயமாக மறையும் பின்னணியில் இவ் உடல் உறுப்பு வர்த்தகர்களே உள்ளனர் என்ற பரவலான அபிப்பிராயம் நிரூபிக்கப்படும். சர்வதேச ரீதியில் நடைபெற்று வரும் இந்நிகழ்வுகள் வெகுவிரைவிலே நாம் எண்ணியும் பார்க்காத புதிய முகங்களை இனம் காட்டும் வகையில் வெளிவரத்தான் போகின்றது.

நமது அடிப்படை உரிமைகள் வென்றெடுப்பதற்கு சகல ஜனநாயக வழிமுறைகளும் தோல்வியைத் தழுவிய வேளையிலே ஆயுதத்தின் துணையை நாடிய உண்மைப் போராளிகளைக்கூடப் பயங்கரவாதிகள் எனக்கூறிக்கொண்டு, வளர்முக நாடுகளின் அரசுகள் கட்டவிழ்த்துவிட்ட இராணுவப் பயங்கரவாதம், கைது செய்த பல்லாயிரம் சிறுவர்கள் திரும்பி வந்ததாகத் தகவல் இல்லை. பதிலுக்கு அடையாளம் தெரியாது எரிக்கப்பட்ட கருகிய உடல்களும், உடல் முழுவதும் சிதைந்துபோன சடலங்களும்தான் வீதியோரங்களிலும், புதர்களிற் கிடையேயும், ஆறுகளிலேயும் கிடைக்கின்றன. இவர்கள் உடல் உறுப்புக்கள் அகற்றப்பட்ட பின்னரே கொலை செய்யப்படுகின்றார்கள் என்று எண்ணுவதற்கு சாதகமான தகவல்கள் பல ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் கிடைக்கின்றன.
சிறீலங்காவில் இத்தகைய இராணுவ சுற்றிவளைப்பு ஒன்றின் போது கைது செய்யப்பட்ட 160ற்கு மேற்பட்டோரில் பிரேதமாக மீட்கப்பட்ட 52 பேரினது உடலில் எவருக்குமே கண்கள் இருக்கவில்லை என்பதும் உடல்கள் அனைத்தும் அடையாளம் தெரியாது சிதைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலேயே இருந்தன என்பதும் மேற்படி கருத்தைச் சிந்திக்க வைக்கின்றன.

## பகுத்தறிவுக்கொவ்வா நிகழ்வுகள்

வளர்முக நாட்டு மக்கள் மத்தியில் பெருமளவு ஆதிக்கம் செலுத்தும் பழமைவாய்ந்த பண்பாட்டு நடைமுறைகளும், பகுத்தறிவுக்கொவ்வா நம்பிக்கைகளும் கூட சிறுவர்களின் வாழ்வைப் பந்தாடி வருகின்றமையை எம்மால் காணமுடிகின்றது. வானசாஸ்திரம் பற்றிய ஆரம்ப அறிவேயற்ற சில சாஸ்திரிமார் கிரக சஞ்சார நிலைமைகளைக் கணிப்பீடு செய்து பிறக்கப்போகும் குழந்தைக்கான நல்லநேரம் ஒன்றைக் கூறிவிட அதையே நம்பிக் குறித்த நேரத்தில் செயற்கையாகப் பிரசவத்தை நடத்துவதால் வலுவற்ற குழந்தைகள் உருவாகியமைக்கு சான்றுகள் பல இந்து மதத்தவர்களிடையே உண்டு. பிறந்த பிள்ளையின் சாதகத்தை கணிப்பிட்டு அப்பிள்ளையால் பெற்றோருக்குத் தீங்குகள் பல ஏற்பட வழியுண்டு என்று கூறியமைக்காக பிள்ளைகளைத் தனிமைப்படுத்தி இருட்டறையில் எவ்வித தொடர்புகளுமற்ற நிலையில் பூட்டி வைத்ததாக ஏராளமான செய்திகள் எமக்குக் கிடைக்கின்றன.

மதத்துவ நம்பிக்கைகளில் தீவிரமான பற்றுக்கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் பலர் ஐந்து வயதுப் பருவத்திலேயே பெற்றோரின் பாசப்பிணைப்பை இழந்து மடாலயங்களில் மதகுரு மாருக்கான கல்வியை பெற்று துறவறவாழ்வை ஏற்றுக்கொள்ளும் பரிதாப நிலையை உலக மதங்கள் அனைத்திலுமே காணமுடிகின்றது. நோய் வசப்பட்ட பிள்ளையை சிகிச்சை அளிப்பதற்கான அடிப்படைவசதிகள் கிடைக்கக் கூடிய நிலையிலும் அவற்றை உதாசீனம் செய்துவிட்டு, தேவாலயங்களுக்குக் கொண்டுசென்று பூசைசெய்தும் வேண்டுதல் வைத்தும் ஏராளமான சிறுவர்கள் மரணமடைவதற்கு மூடநம்பிக்கைகளே காரணமாகின்றன. பிறக்கும் குழந்தையுடன் சந்தர்ப்ப வசத்தால் இணைந்துவிட்ட ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமங்கல நிகழ்வைக் காரணமாக வைத்து அப்பிள்ளையை சகலவற்றிலுமே ஒதுக்கிவைக்கின்ற பெற்றோர்கள் ஏராளம்.

பொருளாதரார வளர்ச்சிநிலை எதுவாக இருப்பினும், அரசியல் கொள்கைகளும் ஆட்சி அமைப்பும் சட்டங்களும் எந்தளவிற்கு தாராளப்போக்கினதாகவும் மனிதாபிமானம் மிக்கதாகவும் அமைந்த போதிலும், உலகில் எந்தவொருநாட்டிலுமே இன, மொழி, மத, நிற, சாதி, பால் அடிப்படையில் சிறுபான்மையினராக உள்ளோர் தலை நிமிர்ந்து வாழத்தக்க சாத்தியங்கள் இருக்கவில்லை என்பதும் இதனால் பெருமளவிற்குப் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களே என்பதும் மறுக்க முடியாத உண்மை.

## அகதிகளும் அனாதைகளும்

வளர்முக நாடுகளில் ஒன்றனபின் ஒன்றாக தொடரும் ஆயுத மோதல்களும், உள்நாட்டு யுத்தங்களும், பயங்கரவாத நடவடிக்கைகளும், இயற்கை அழிவுகளும் இன்று 13 மில்லியன் மக்களை அகதிகளாகவும், மேலும் 20 மில்லியன் எண்ணிக்கையானோரை இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் போன்றோரிடம் தஞ்சமடையவும் செய்துள்ளதாக ஐக்கியநாடுகளிற்கான அகதிகள் ஸ்தானிகராலயம் கூறுகின்றது. ஆறு மில்லியன் எண்ணிக்கையான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டும், அடிப்படைச் சுகாதார வசதிகள் இன்மையால் தொடர்ச்சியான நோய்களுக்கு உட்பட்டும், கல்வி வசதியின்மையால் உடல் உளவளர்ச்சி குன்றியும் உள்ளார்கள்.

இன்னோர்புறம் மேற்குறிப்பிட்ட சம்பவங்களினால் தம் பெற்றோர்கள் இருவரையுமே பறிகொடுத்து விட்டு பாதுகாப்பு ஏதுமற்ற நிலையில் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் அனாதைளாகி இரந்துண்ணும் பரிதாபநிலை தொடர்கின்றது. இவ்வாறான சிறுவர்கள் வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோரங்களிலும் சேரிகளிலும் வாழும் மக்களுடன் தம்மையும் பிணைத்துக் கொள்வதனால் உடல் உள வளர்ச்சியைப்பெற்று தம்மை தனித்துவமானவர்களாக நிலை நிறுத்திகொள்வது முடியாமலே போய்விடுகின்றது.

கடல் கடந்து மேலைநாடுகளில் தஞ்சமடைந்து விட்ட குடும்பங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் புதிய சூழலுக்குத் தம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ள முடியாமல் தவிக்கின்ற நிலையை அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் கூறுகின்றன.தாய் மொழியை விட்டு புகுந்த நாடுகளின் மொழிகளில் தமது கல்வியைத் தொடருகின்ற இச் சிறுவர்களினால் தம் திறமைகள் அனைத்தையும் வளர்த்துக்கொள்ளவோ வெளிப்படுத்தவோ மிகவும் கடினமாகிவிடுகின்றது. இத்தடைகளைத் தன் திறமையினால் தாண்டிவிடும் ஒரு சிலருக்கும் "அகதிகள்"என்ற அந்தஸ்தும் "கறுப்பர்" என்ற நிற அடையாளமும் மன உறுதியைச் சோதிக்கும் பரீட்சைகளாகின்றன.

கலிபோர்னியா மாநிலந்தில் வாழுகின்ற 355,000 கள்ளக் குடியேற்ற மக்களது சிறுவர்களின் கல்விக்கென ஆண்டொன்றிற்குச் செலவாகும் 2,000 மில்லியன் டொலர்களை அமெரிக்க வரியிறுப்பாளர்கள் ஏற்றுகொள்வது தவறானது எனக் குடியரசுக்கட்சிப் பிரநிதிகள் கூக்குரலிடுகின்றார்கள். என்றோ ஒரு நாள் ஐக்கிய அமெரிக்காவில் வாழப்போகும் அகதிச் சிறவர்களின் கல்விச்செலவினம் பெரும் பிரச்சனையாகும் என்பதற்கு கலிபோர்னியா முன் உதாரணமாகின்றது.

## தாய்மைக்கு ஏங்குகின்றார்கள்

பெருகிவரும் புதிய புதிய பொருட்களின் கவர்ச்சியும், உயர்வுற்றுவரும் அடிப்படைப்பொருட்களின் விலைகளும் சாதரண குடும்பத்தவர்களது வருமானம் கொண்டு ஈடுசெய்யமுடியாத நிலைமையிலே,பெண்களும் தொழிலைத் தேடிக்கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளப்பட்டுள்ளனர்.தொழில் மய நாடுகளில் கருவளம் கொண்ட பெண்களில் 50 சதவீதத்தினரும், வளர்முக நாடுகளில் 30 சத வீதத்தினரும் வீட்டுக்குவெளியே தொழில் செய்கின்ற இன்றைய நிலையில் ஏறத்தாள 25 மில்லியன் சிறுவர்கள் தாய்ப்பாலின் சுவை தெரியாதவர் களாகவும் 40 மில்லியன் சிறுவர்கள் ஒரு நாளைக்கு இருவேளைக்கு மேல் தாய்ப்பாலைப் பெற முடியாத வர்களாகவும் இருக்கின்றார்கள்.பெற்றோர் இருவருமே வெளியே செல்வதனால் பத்துவயதுக்குட்பட்ட 1,000 மில்லியன் சிறுவர்களில் 15 சதவீதத்தினரால் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் அவர்களது அன்பைப் பெற முடியவில்லை.

தந்தையின் ஆதரவையும், தாயின் பாசத்தையும் திருப்திகரமாகப் பெறமுடியாத இச் சிறுவர்களே எதிர்காலத்தில் சமூகவிரோதச்செயல்களில் ஈடுபடுபவர்களாகவும், சமூக அமைப்பை மதிக்காதவர் களாகவும் வளருவதாக உளவியலாளர் பலர் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.ஐக்கிய அமெரிக்காவிலே 1995ல் மட்டும் 18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் 2,983 பேர் கொலைக்காவும், 4,524 பேர் கற்பழிப்புக்காகவும் 45,046 பேர் கொள்ளைச் செயல்களுக்காகவும், 64,648 பேர் அடிதடிசண்டைகளுக்காகவும் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளார்கள். இவர்களில் 60 சதவீதமானோர், பெற்றோர் இருவருமே தொழில் செய்யும் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் என்பது இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

## உழைக்கும் சிறார்கள்

திலீப் வயது பத்து.நாளொன்றிற்கு 12 மணித்தியாலங்கள், மத்திய இந்திய நகரான வாரணாசியில் உள்ள உலோக ஆலையொன்றில் எரியடுப்புக்களின் முன்னால் நின்று வேலை செய்கிறான். உடல் அனைத்திலுமே கரிப்பூச்சு. எரி அடுப்பினாற் சூடுபட்ட தழும்புகள் உடல் முழுவதும் பட்டை பட்டையாக உரிவுற்றுள்ளன. நேர்த்தியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளி ஒருவனுக்கான சிறப்பான உதாரணம் அவன். அர்ஜுன் என்ற அவனதுமுதலாளி "திலீப் மிகச்சிறந்ததோர் தொழிலாளி. அவனுக்கு நல்ல சம்பளம் கொடுத்தே இங்கு வைத்திருக்கின்றோம்" என்கிறார். அவனது மாதாந்த வேதனம் ஒன்பது டொலர்கள் மட்டுமே. தாய், பாட்டன், பாட்டி, ஆறு சகோதரங்களின் அன்றாட வாழ்வுக்கு ஒரேயொரு உழைப்பாளி அவன்.

இந்தியச் சிறுவர்கள் அபாயமிக்க பொஸ்பரஸ் தூளுக்குள் தீக்குச்சிகளை அமுக்கி எடுக்கிறார்கள்.வெடிமருந்துகளைக் கலக்கி வெடிகளும் வாணங்களும் செய்கிறார்கள். சுருட்டு, பீடி சுற்றுகிறார்கள். உலோகஉளியடுப்புக்களின் முன்னால் நின்று எவர்சில்வர் பாத்திரங்கள் செய்கின்றார்கள்.

| | பலாத்காரமாக அழைத்தொழில்புரியும் சிறுவர்கள் (1995இன் கணிப்பு) |
|---|---|
| **இந்தியா** | 73,000,000 |
| **பாகிஸ்தான்** | 8,000,000 |
| **நேபாளம்** | 5,700,000 |
| **பிலிப்பைன்ஸ்** | 5,500,000 |
| **சீனா** | 5,000,000 |
| **பங்களாதேஸ்** | 2,800,000 |
| **தாய்லாந்து** | 1,100,000 |
| **சிறிலங்கா** | 500,000 |

ஆரம்பக்கல்வியையே பெறாத பௌறொஸாபாத் சிறுவர்கள். அழகான இமிற்றேசன் அணிகலன்கள் உருவாக்குகிறார்கள். மிசாப்பூரில் உள்ள ஏராளமான சிறுவர்கள் ஏற்றுமதிக்கான கம்பளங்கள் இழைக்கிறார்கள். பங்களூரில் உள்ள சிறுவர்கள் பலவகையான கண்ணாடிப் பொருட்களைத் தயாரிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நாடுகள் அனைத்தும் தங்களது சிறுவர்களின் மேல் முதலீடு செய்வது பற்றிச் சிந்திக்கின்ற வேளையிலே இந்திய நாட்டிலோ வளர்ந்து வரும் பொருளாதாரத் துறைகளில் சிறுவர்களை எவ்வாறு முதலீடு செய்யலாம் என்று சிந்திக்கின்ற போக்கே காணப்படுகின்றது. உலகிலுள்ள மொத்தத் தொழிலாளச் சிறுவர்களில் அறுபது சதவீதமும் இந்தியாவிலேயே உள்ளனர் என்பது அதிர்ச்சிதரும் செய்தியாகும். தாம்பட்ட கடனுக்கு ஈடாக தமது ஆறுவயதுச் சிறுவர்களையே கம்பள உற்பத்தியாளர் களுக்கு விற்றுவிடும் கொடுமை இந்திய நாட்டில் சாதாரணமாகவே உள்ளது.

பாடசாலை சென்று தமது உளத்திறனை விருத்தி செய்ய வேண்டிய பருவத்துச் சிறுவர்களும் ஆடி, ஓடி விளையாடி குதூகலத்துடன் தனது உடல் வலுவைப் பெருக்கிக்கொள்ள வேண்டிய பாலகர்களும்,, இன்று ஆபத்து நிறைந்த இரசாயன ஆலைகளிலும், வெயில் மழை என்ற பேதமற்று உழைக்கும் பண்ணைகளிலும் மாடாக உழைக்கின்ற அவலம் வளர்முக நாடுகள் எங்குமே பொதுவாகக்காணப்படுபின்றது.15 வயதிற்குட்பட்டவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாக அனைத்து நாடுகளிலுமே இருந்த போதிலும் எந்தவொரு நாடுமே இவற்றை அனுசரித்து நடப்பதாக எம்மால் அறியமுடியவில்லை.

எழுபது சதவீதமான உழைக்கும் சிறுவர்களும் தம் பெற்றோருடன் வயல்களிலும் பண்ணை நிலங்களிலுமே காணப்படுவதானால் சட்டங்கள் துணைகொண்டு இதனைத் தடுத்துவிட முடியவில்லை.சிறுவர்களினால் தயாரிக்கப்படும் பொருட்களின் இறக்குமதியைத் தடை செய்வதன் மூலம் முழுமையான வெற்றியைப்பெற முடியாமைக்கு இப் பொருட்களின் உற்பத்தியில் 90 சதவீதமும் உள்நாட்டுச் சந்தைகளிலேயே விற்கப்படுவதனால் முடியாமல் போகின்றது. கட்டாயக் கல்விக் கொள்கைகளும் பாடசாலை மதிய உணவு வழங்கும் திட்டங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியடைய குடும்பங்களில் நிலவும் வறுமை காரணமாகிறது.

வறுமைக்கொடுமையினால் தொழில் நாடிச் சென்ற ஏராளமான சிறுமிகள் பாலியல் வதைகளிற்கு ஆளாகி நாள்தோறும் சித்திரவதைகளை அனுபவித்து வருகின்ற செய்கைகள் எமக்குப் புதியவையல்ல.தமது குற்றச் செயல்களை மூடி மறைப்பதற்காக இவ்வாறான சிறுமிகளைப் பொய்யான தகவல்களின் பேரில் சட்டத்தின் பிடிக்குள் மாட்டிவிடும் கைங்கரியத்தை தமது செல்வாக்கின் துணை கொண்டு செய்துவரும் பெரியோர்கள் எண்ணிலடங்கா. தமது கற்பையும் பறிகொடுத்து கையில் குழந்தையுடன், சமூகத்தின் முன் "கள்வர்" என்ற பட்டத்தையும் சுமந்துவாழ முடியாமற் போய்விட்ட ஏராளம் சிறுமிகள் தம் வாழ்வையே முடித்துவிட்ட நிகழ்வுகளும் அதிகமுண்டு.

## எயிட்சின் சின்னங்கள்

மிகவும் மர்மமானதும் எவ்வித எல்லைகளோ குறிப்பிட்ட தடுப்பு முறைகளோ அறியப்படாததுமான எயிட்ஸ் (தேவையான நோய் எதிர்ப்புத்தன்மை இன்மை) என்ற கொடு நோய் விரைவான ஓர் உறுதியுடன் தனக்குப் பலியானவர்களின் எண்ணிக்கையை நாளுக்குநாள் ஆறாயிரத்தினால் பெருக்கி வருகின்றது. ஆண்களை விடப் பெண்களிடையேதான் ஏச்.ஐ.வி.வைரஸ் விரைவாகப் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. கென்யாவில் உள்ள 15 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட ஏச்.ஐ.வி. தொற்றுள்ளோரில் 80 சதவீதத்தினரும் பெண்களே என்பது மேற்குறிபிட்ட தகவலை உறுதி செய்வதாக அமைகின்றது.

இந்நோயினால் பீடிக்கப்பட்ட பெற்றோருக்குப் பிறந்த சுமார் எட்டு மில்லியன் சிறுவர்கள் இன்று ஏச்.ஐ.வி. வைரஸ் காவிகளுடன் ஐந்து ஆண்டுகளிற்கும் குறைவான மரணநாட்களை எண்ணிக்கொண்டும், தப்பிப் பிழைத்துவிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே எண்ணிக்கையான சிறுவர்கள் தமது பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமே இழந்து எயிட்சின் அனாதைகளாக சமூகத்தின் பழிச்சொல்லிற்கு ஆளாகி தெருக்களில் பிச்சை எடுத்து வாழும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டும் உள்ளார்கள். இந்நோயின் தாக்கத்தைப் பெற்றுவரும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஒரு மில்லியனாக அதிகரித்து வருவது இந் நூற்றாண்டின் இறுதியில் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களின் மரணவீதத்தில் இதுவே முதன்மையான தனிப் பெரும் காரணியாக அமையப்போவதை எமக்கு அறிவிக்கின்றது.

உலகிலுள்ள ஏச்.ஐ.வி. வைரஸ் தாக்கம் உள்ளோரில் 70 சதவீத்தினரும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களே என்றும் மாலி, ஐவரிகோஸ்ற், பெனின், கமறூன், எத்தியோப்பியா, கென்யா, உகண்டா, ஜாம்பியா, ருவண்டா, ஸிம்பாபே, பொட்ஸ்வானா, கானா ஆகிய நாடுகளின் நகர்ப்புற மக்களின் நாலில் ஒருவர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் நியூஸ்வீக் சஞ்சிகையின் மதிப்பீடு கூறுகின்றது. பெரும்பாலான தென் சகாரா நாடுகளில் கருத்தரித்த பெண்களில் மூன்றில் ஒருவர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார் என்பது பிறக்கப்போகும் எப்பாவமுமறியா பிள்ளைகள் படப்போகும் நரக வேதனைகளை எமக்கு எடுத்துக் காட்டும். உகண்டா, கானா, கென்யா, ருவண்டா போன்ற நாடுகளில் பெற்றோரைப் பறி கொடுத்த ஒரே குடும்பத்து எட்டுச் சிறுவர்களை வயது முதிர்ந்த பாட்டனும், பாட்டியும் பராமரிக்கின்ற பரிதாப நிலையை பத்திரிகைகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணப்பிடிக்குள்

பல மில்லியன் சிறுவர்களின் உடல் வளர்ச்சியையும் உளவிருத்தியையும் பாதிப்பதாக இதுவரை கூறப்பட்ட சமூக அமைப்பினை அடிப்படையாகக் கொண்ட காரணிகளிற்கும் மேலாக போசாக்கின்மையும் தொற்று நோய்களும் மேலும் பல்லாயிரக்கணக்கான சிறுவர்களின் உயிர்வாழ்வைப் பறித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுகின்றது. உலகில் ஆண்டுதோறும் 0.5 மில்லியன் குழந்தைகள் கருவிலேயே இறந்து விடுகின்றன. ஐந்து வயதிற்குட்பட்ட 4.5 மில்லியன் சிறுவர்கள் தொடர்ச்சியான வயிற்றோட்ட நோய்க்காளாகி மீட்பதற்கான இலகுவானதும் மலிவானதுமான வழிமுறைகள் இருந்தும் அவற்றைப் பெற்றுக் கொள்ளவோ முடியாத பெற்றோர்களினால் சாகடிக்கப்படுகின்றார்கள். அம்மை, தொண்டைக்கரப்பான், குக்கல், ஈர்ப்புவலி, சுவாசத்தடை, போலியோ போன்ற ஆறு கொடுநோய்களும் ஐந்து மில்லியன் சிறுவர்களை ஆண்டாண்டாகப் பலி கொள்வதுடன் மேலும் ஐந்து மில்லியன் தொகையினரை வாழ்நாள் முழுவதும் முடவர்களாக்கியும் வருகின்றன.

உலக மக்களின் பத்தில் ஒருவர் ஏதோ ஒரு வகையில் உடல் ரீதியாகவோ உளவியல் அடிப்படையிலோ வலுவற்றோராக இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவர்களில் மூன்றில் ஒரு பங்கினரும் பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்களே என்பது எமது மனத்தை உறுத்துவதாக உள்ளது.எல்லாச் சிறுவர்களிலும் மிகவும் புறக்கணிக்கப்படுபவர்களும், பெருமளவு வசதியற்றிருப்பவர் களும் வலது குறைந்த இச்சிறுவர்களே என்பதுடன் நாளின் பெரும் பகுதியை இருட்டறைகளிலே சுவரையும் கூரையையும் பார்த்தவண்ணம் சீரழிகிறார்களே என்பது கல்நெஞ்சையும் கரைப்பதாகவே உள்ளது. பெருந் தொகையான இச் சிறுவர்கள் சமூகத்தினின்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமைப்படுத்தப்பட்டு, குடும்பத்தினின்றும் தள்ளி வைக்கப்பபட்டு, தம் குறைபாடுகளினால் படும் துன்பத்திலும் பார்க்க, மற்றவர்கள் தம்மைப் பற்றிக்கொண்டுள்ள எண்ணங்களினால் பெரும் துயரை அடைகின்றார்கள். உடல் ஊனமுற்றவர்கள் "கர்மவினை" எனக்கூறி ஒதுக்கப்படுவதுடன் பெற்றோரே பெரும் சுமையாகக் கருதுகின்ற நிலை கவலையளிப்பதாக உள்ளது.

## தொழில்மய நாடுகளின் முதுகுப்புண்

கடந்த அரை நூற்றாண்டுகளில் மக்களது வாழக்கைத்தரம் பெரும் முன்னேற்றத்தை எட்டியுள்ளது. மதிப்பிட முடியாதளவு பொருளாதாரச் செழுமையையும் தனிநபர் சுதந்திரத்தையும் வென்றெடுத்துள்ளது. உடலுழைப்பின் அழுத்தம் குறைவுற்று ஆரோக்கியமாகவும், நீண்ட காலம் உயிர் வாழவும் முடிந்துள்ளது. இதற்கு முன்னர் கிடைக்காதளவு பாதுகாப்பையும் சமூகசேவை வசதிகளையும் வறியவர்களும் வயோதிபர்களும் பெருகின்ற நல்ல நிலை உருவாகியுள்ளது.

இனம், மொழி, மதம், நிறம், பால் போன்ற துறைகளில் கூர்மையுடன் விளங்கிய பாகுபாடும் ஒதுக்கல் கொள்கைகளும் படிப்படியாக அருகி வந்துள்ளது. தொழில்மய நாடுகள், உலகிலேயே மனித வாழ்வுக்கான சொர்காபுரியாக எம்மைக் கருத வைக்கின்றன.

சென்ற ஆண்டு ஐந்து முன்னணி தொழில் மயநாடுகளில் மேற்கொண்ட கருத்துக் கணிப்பீட்டின்படி ஐக்கிய அமெரிக்காவில் 77 சதவீதத்தினரும், யப்பானில் 40 சதவீதத்தினரும், பிரான்சில் 36 சதவீதத்தினரும், கனடா, ஜேர்மனியில் 32 சதவீதத்தினரும் தமது சிறுவர்களின் வாழ்வு பற்றி அவநம்பிக்கை உடையோராக உள்ளமை தெரியவந்துள்ளது. வளர்முக நாடுகளில் சிறுவர்களின் வாழ்வு வறுமையினால் சீரழிவதற்கு மாறாக, தொழில்மய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுச் சிறுவர்களின் எதிர்காலம் செல்வவளத்தினரால் சிதைவுற்று வருவதை நாம் காண்கிறோம். தொழில்மய நாடுகள் சூதாட்டத்தில் செலவிடும் 80,200 மில்லியன் டொலர்களில் மிகப் பெரும் பங்கை சிறுவர்களே கொண்டுள்ளார்கள். ஐக்கிய அமெரிக்காவில் 15 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களில் நான்கில் ஒருவர் ஏதோவொரு போதைப் பொருளைப் பாவிக்கின்றார். 16 சதவீதத்திற்கு மேற்பட்டுவிட்ட விவாகரத்துக்கள் குடும்ப வாழ்வைச் சீரழித்து வருகின்றது. ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இடம் பெற்று வரும் வர்த்தக ரீதியிலான ஆயுத உற்பத்தி கட்டுப்பாடற்ற தனிநபர் கொள்வனவிற்கு வழி அமைகின்றது.85 சதவீத மக்களின் வாழ்வுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுவிட்ட தொலைக்காட்சி சாதனத்தில் இடம் பெற்று வரும் நிகழ்ச்சிகள் வன்முறைகளிற்கும்,பாலியல் உணர்வுகளிற்கும் உரமூட்டுவனவாயுள்ளன.தொழில்மயநாடுகளில் பொதுவாகக் காணப்படும் இந்நிலைமைகள் அங்கு வாழும் சிறுவர்களை ஏதோ ஒரு வகையில் பாதிக்கவே செய்கின்றன.

தொழில்மய நாடுகளில் மொத்த தேசிய உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கும் ஆடம்பரவாழ்விற்கும், அத்தியாவசியமற்ற தேவைகளிற்கும் செலவிடப்படுகின்றமையே அந்நாட்டு சிறுவர்களின் வாழ்வு தடம் புரளக் காரணமாகின்றது. இதே சமயம் வளர்முகநாடுகளில் உள்ள 14 மில்லியன் சிறுவர்கள் இலகுவில் மீட்கப்படக்கூடிய நோய்களினால் மட்டும் ஆண்டுதோறும் சாகடிக்கப்பட்டு வருகின்றார்கள். செல்வச் செழிப்பு மிக்க தொழில்மய நாடுகள் தமது மொத்தத் தேசிய வருமானத்தில் 0.7 சதவீதத்தையாவது வளர்முக நாடுகளின் வளர்ச்சிக்காக கொடுத்து உதவுவது என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்குறுதியை நோர்வே, சுவீடன், நெதர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் தவிர்ந்த வேறு நாடுமே காப்பாற்றிக்கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்சார்ந்த செலவினங்களுக்கும், ஆயுத உற்பத்திக்கும் ஒதுக்கப்படும் வளங்களில் பத்துசத வீதத்தையாவது தொழில்மய நாடுகள், வளர்முக நாடுகளின் சமூக முதலீட்டிற்கும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதற்கும் திசை திருப்பி விடுமேயானால் உலகின் மூலை முடுக்குகளில் வாழும் ஒவ்வோர் சிறுவனும் தனது அடிப்படை தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## முன்னுரிமைக்குரியவர்கள்

சிறுவர்களின் தேவைகளையும் அவர்களது அடிப்படை உரிமைகளையும் அபிவிருத்தி சார்ந்த நடைமுறைகளின் முன்னனியில் வைத்துச் செயற்பட வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டு விட்டது. மனம்-உடல் ஆளுமை என்பன விருத்தி பெறுகின்ற பாலியல் பருவத்திலே ஏற்படுகின்ற தற்காலிக இழப்புக்கள்கூட மானிட வளர்ச்சியில் ஆயுட்கால சேதத்தையும் விபரீதத்தையும் ஏற்படுத்தக்கூடியது எனபதை நாம் உணரவேண்டும். ஒரு குழந்தை இயல்பாக வளர்ச்சி அடைவதற்கும், தன் திறமைகளுக்கு அத்திவாரம் இடுவதற்கும் ஒரோயொரு சந்தர்ப்பம் மட்டுமே உண்டு என்பதைப் புரித்து கொண்டு, அந்த ஒரு சந்தர்ப்பத்தைக் காக்கும் பணிக்கு முன்னே வேறெந்த முன்னுரிமைகளும் குறுக்கிட அனுமதிக்கக்கூடாது.

உலகம் முழவதும் பலநூறு மில்லியன் சிறுவர்கள் உளவியல் அடிப்படையில் உடல் ரீதியாகவும் இயல்பாக விருத்தியடையும் வாய்ப்பினை இழக்கும் அபாயம் அரவமின்றி உருவாகி வளர்ந்து வருகின்றது. மொசாம்பிக்கில் அல்லது அங்கோலாவில், சோமாலியாவில் அல்லது ருவண்டாவில், ஆப்கானிஸ்தானில் அல்லது கம்போடியாவில், பிரேசிலில் அல்லது வங்களாதேஷில், கெயாட்டியில் அல்லது பொஸ்னியாவில், செசன்யாவில் அல்லது சிறிலங்காவில் எல்லா நாடுகளிலுமே சிறுவர்கள் மேல் திணிக்கப்படும் அவலங்கள் மிகவும் குரூரமானவை. பரந்தளவில் நிகழும் வன்செயல்களை நேருக்குநேர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
613054

கண்டும் கேட்டும் அனுபவித்தும் மனம் குன்றிப் போயிருக்கும் இந்த மில்லியன் கணக்கான சிறுவர்கள் 15-20 ஆண்டுகள் கழிந்த பின்னர் தாம் வாழப்போகும் சமுதாயத்தின் எத்தகைய பங்கினைக் கெண்டிருப்பார்கள் என்பது கேள்விக்குரியதாகும்.

## கருத்தாங்கும் வயிறு காய்கின்றது

கருவுற்ற ஒரு பெண் தனது உடல் நலத்தைப் பேணவும் வயிற்றில் வளரும் குழந்தையின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தவும் மேலதிக உணவை உட்கொள்வதுடன் அவற்றின் போசாக்கின் தரத்தையும் பெருக்கிக்கொள்ள வேண்டும். வளர்முக நாடுகளின் சமூக அமைப்பில் உணவு பகிரப்படும்போது முதலில் ஆண்களுக்கு, அடுத்துப் பிள்ளைகளுக்கும் முதியோருக்கும், எஞ்சியதே குடம்பத் தலைவிக்கு என்ற மரபுவழி நடைமுறைகள் கற்பமுற்ற பெண்ணாலும் குறை உணவையே பெறவைக்கின்றது. தெற்காசியா, தென்சகாரா நாடுகளின் குடும்பங்களில் மலிந்துவிட்ட வறுமையின் காரணமாக போசாக்கு உணவு பற்றிப் பெண்கள் அதிகம் அக்கறை கொள்வதாக இல்லை, அது கற்பவதியானால்கூட இதுவே நிலை.

தங்கள் குடும்பங்களில் நிலவும் தரித்திர நிலையை குறைத்துக்கொள்ள எரிபொருள் சேகரித்தல், நீர் கொண்டு வருதல், உணவு பதனிடுதல், குழந்தைகளைப்பராமரித்தல், வீட்டை நிர்வகித்தல், வீட்டுத்தோட்டங்களைப் பேணல் போன்றவற்றுடன் வீட்டிற்கு வெளியே தமக்குக்கிடைக்கின்ற வருமானத்திற்கான ஒவ்வொர் சந்தர்ப்பத்தையும் பயன் படுத்திக்கொள்ளவே இப் பெண்கள் முன்னிற்கின்றனர். கருவுற்றிருக்கும் தன் நிலைமையை இவ்வாறான உழைப்பிற்கு ஓர் தடையாகக் கருதக்கூட இப்பெண்கள் மனம் தயங்குமளவிற்கு இங்குவறுமை கோலோச்சுசிறது.

நேற்று வயலில் நாற்று நட்ட பெண் மறுநாள் குழந்தையைப் பெற்றெடுப்பதும், தொழில் நாடி வெளியே சென்றவள் பிள்ளையுடன் வீடு திரும்புவதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைபிறந்த மறுநாளே நீர்கொண்டுவர வெளியே போவதும் கிராமப்புற ஏழைமக்களிடையே ஆச்சரியம் தரும் நடப்புகள் அன்று.சாதாரண ஒரு பெண்ணிற்கு அவசியமான 2,500 கலோரி உணவையே சரிவரப் பெறமுடியாத இவ்வறிய பெண்கள், தொழில் செய்வதால் இழக்கப்படும் 500 கலோரி சத்தையும், வயிற்றில் வளரும் பிள்ளைக்கு வேண்டிய 500 கலோரி உணவையும் மேலதிகமாக பெற்றுக் கொள்ள வழியற்றவர்களாக தாமும் பலமிழந்து எதிர்கால சந்ததியையும் பாழ்படுத்திக் கொள்கின்றார்கள்.

## ஆரோக்கியமற்ற சந்ததி

புரதம், மாப்பொருள், கொழுப்பு, உயிர்ச்சத்து, கனிஉப்பு, நீர் என சகலதும் கொண்ட நிறை உணவைச் சரிவரப்பெற முடியாத நிலையிலுள்ள கிராமப்புற ஏழைப்பெண்களும், நகர்ப்புற சேரிவாழ் வறிய மாந்தர் பெற்றோருக்கும் பிள்ளைகளில் ஐந்தில் ஒருவர் சராசரி நிறையான 2.5 கிலோவிற்கும் குறைவானவையாகவே காணப்படுகின்றன. உலகில் பிறக்கின்ற குறைந்த நிறை கொண்ட பிள்ளைகளில் ஏறத்தாழ அரைப்பங்கும் இந்திய உபகண்ட நாடுகளிலேயே காணப்படுகின்றன. கர்ப்பமுற்ற காலத்தில், குறிப்பாக இறுதி ஐந்து மாதங்களிலும் போதியளவு உணவை இப் பெண்கள் உட்கொண்டிருந்தால் பெருமளவு நிறை குறைந்த பிள்ளைகள் பிறப்பதைத் தவிர்த்திருக்க முடியுமென உலக சுகாதார நிறுவனம் கருத்து வெளியிட்டுள்ளது.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்குப் பிறந்த பெரும் சதவீதத்தினரான பிள்ளைகள் நோய்களை எதிர் கொள்வதற்கான சக்தியற்றவர்களாகவும், எலும்புகள் கிரமமாக வளர்ச்சியடையாதவர்களாகவும், உறுதியற்ற தசை நார்கள் உடையவர்களாகவும், கண்பார்வை குன்றியவர்களாகவும், செவிப்புலன் பலவீனமானவர் களாகவும், மூளையில் நியூரோன்கள் வளர்ச்சி தடைப்பட்டு மந்தபுத்தி உடையவராகவும், அன்றாடம் தேய்வடையும் இளையங்களை மீண்டும் புதிதாக உருவாக்கிக் கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனற்றவர்களாகவும் தம் வாழ்நாள் எல்லாம் மனவிரக்தி கொண்டவர்களாகச் சீரழிகின்றார்கள்.

வளர்முக நாடுகளின் பெற்றோர் கருவளத்தைக் கட்டுப்படுத்துவதிலும், கருவள .இடைவெளியை அதிகரிப்பதிலும் போதிய அக்கறை கொள்ளாமையும், போசாக்கு உணவின்மையும், கர்ப்பகாலத்தில் நோய்த்தடுப்பு முறைகளைப் பெறாமையும் பிறக்கின்ற குழந்தைகளின் ஆரோக்கியமின்மைக்குக் காரணங்களாகின்றன. இன்று உலகிலுள்ள 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களில் 30 சதவீதத்தினர் வயதிற்கேற்ற நிறையற்றவர்கள், 20 சதவீதத்தினர் வயதிற்கேற்ற உயரமற்றவர்கள், 15 சதவீதத்தினர் உயரத்திற்கேற்ற நிறையற்றவர்கள், 10 சதவீதத்தினரான சுமார் 50 மில்லியன் சிறுவர்கள் மேற்குறிப்பிட்ட பாதிப்புகள் அனைத்தையும் ஒரு சேரப்பெற்ற நலிவுற்றவர்கள். இவ்வாறான சிறுவர்களின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் வாய்ப்பு இல்லாதவரை பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த அரசாங்கங்கள் மேற்கொள்ளும் எந்த நெடுங்காலத் திட்டங்களும் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற மாட்டாது.

ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 1,000 உயிர் வாழ்வோரிற்கு 140ற்கு மேலானோர் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நைஜீரியா உட்பட 43 நாடுகளில் இறந்துவிடுகின்றன. இதில் 32 நாடுகளும் தென்சகாரா நாடுகளாகும். இந்தோனேசியா, வியட்நாம், பிரேசில் உட்பட 28 நாடுகளில் இம்மரண எண்ணிக்கை 90ற்கு மேலுள்ளது.உலகிலுள்ள, ஒரு வயதிற்குட்பட்ட 11.6 மில்லியன் சிறுவர்களும், 1முதல் 4வயது வரையிலான 3.5 மில்லியன் சிறுவர்களும் நோய்களினால் பீடிக்கப்பட்டு ஆண்டுக்கு இறந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைகொடுக்கும் தொழில் நுட்பம்

இந்நிலையில் அதிகரித்து வரும் சிறுவர் மரணத்தையும், பெருகிவரும் உடல், உள இயலாமையையும் கட்டுப்படுத்து வதானால் ஏழை மக்களினால் தயக்கமேதுமின்றிப் பயன்படுத்தத்தக்க குறைந்த செலவீனத்தைக் கொண்ட முறைமை ஒன்று கண்டுபிடிக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் மருத்துவத்துறையினருக்கு ஏற்பட்டது. உருவாக்கப்படும் இச்சாதனம் எவ்வித கல்வியும் பயிற்சியுமற்ற சாதாரண மக்களாலே நேரடியாகப் பிரயோகிக்கும் வசதி கொண்டதாகவும், அதே சமயம் ஏழை மக்கள் செறிவாக வாழும் நாட்டின் பின் தங்கிய எல்லைப்புறக் கிராமங்களுக்கு இலகுவில் எடுத்துச் செல்லவும், சேமித்து வைக்கக்கூடியதாகவும் அமைய வேண்டியதாக இருந்தது. எனவே குறைந்த செலவீனம், இலகுவான பிரயோகம், சுலபமான விநியோகம் என்ற மும்முனை இலக்குடன் புதுமையொன்றைச் செய்ய வைத்திய விஞ்ஞானத்துறை ஊக்குவிக்கப்பட்டதன் பயனாக புதிய தொழில்நுட்ப சாதனை ஒன்று சிறுவர் வாழ்வில் புரட்சியைத் தோற்றுவித்துள்ளது.

சுகாதார, வைத்திய சேவை வசதிகள் சகல பிரிவு மக்களிற்கும் கட்டாயமான தேவைகள் என்பது எந்தளவிற்கு உண்மையோ அதேயளவிற்கு தற்போதுள்ள இவ்வசதிகள் போதுமானவையல்ல என்பதும் உண்மையே. கால்நூற்றாண்டிற்கு முன்னர் நவீன வைத்திய சேவை வசதிகளும் தொழில்நுட்ப சாதனங்களும் நகர்ப்புறங்களில் வாழ்ந்த வசதிபடைத்த ஒரு சிறு கூட்டத்தினருக்கே கிடைத்தபோது, போசாக்கின்மையாலும் தொடர்ச்சியான நோய்களினாலும் பாதிக்கப்பட்ட பல மில்லியன் சிறுவர்களைக் கொண்ட கிராமப்புற ஏழைகளிற்கு எவ்விதமான வசதிகளும் செய்து கொடுக்கப் படவில்லை. வைத்தியசாலைகளிலும் பரிசோதனை நிலையங்களிலும், டாக்டர்களிடமும் அகப்பட்டுக் கொண்ட இவ் வைத்திய சேவை வசதிகளின் அதிகரித்த பெருந்தொகைச் செலவீனத்தைத் தாங்கி நிற்கும் தகுதியற்ற இவ்வறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களால் தங்களது குழந்தைச் செல்வங்கள் துடிதுடித்து மாண்டு போவதைப் பார்த்து கண்ணீர்விடவும், கவலைப்படவும், அனுதாபப்படவும் முடிந்ததேயொழிய வேறெதுவும் செய்ய இயலவில்லை.

மரபுவழி வந்த இவ் வைத்திய சேவை வசதிகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் கைவிட்டு கிராமப் புறங்களில் வாழும் ஏழைக் குடும்பங்களையே சுகாதார சேவை மையங்களாக உருவாக்கிக் கொள்வதே ஏராளமான சிறுவர்களைக் காப்பாற்றுவதற்கான சிறப்பான மார்க்கம் என்பது புரிந்து கொள்ளப்பட்டது. அண்மைக் காலத்தில் மருத்துவ உலகு எமக்குப் பெற்றுத்தந்த புதியதும் இலகுவானதும் சிக்கனமானதுமான சாதனை களை நாம் பின்தங்கிய சகல கிராமப்புறங்களிற்கும் எடுத்துச் செல்வோமேயானால் தற்போதைய சிறுவர் மரண எண்ணிக்கையையும் பெருமளவிற்குத் தாழ்த்திக்கொள்ள முடியும் என்பது அளவிற்கு மீறிய கணிப்பீடேயன்று.

## வளர்ச்சியை அவதானித்தல்

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைக்கு தன்னைத் தாக்கியுள்ள நோய் என்னவென்றோ, அது ஏன் எதனால் தன்னைப் பீடித்ததுவென்றோ, அதனின்றும் விடுதலை பெற என்ன செய்ய வேண்டுமென்றோ புரிந்து கொள்ளும் திறனில்லை. ஆனால் பெற்றோர் -குறிப்பாக தாய் தன் குழந்தையைத் தாக்கியுள்ள நோயை காரணகாரியம் எதுவென்று புரியாமலேயே கண்டுகொண்டு விடுகின்றாள். எனினும் தாயின் கண்களுக்கும் தெரியாமல் குழந்தையின் வளர்ச்சியையோ நோய் எதிர்ப்பு ஆற்றலினையோ பாதிக்கின்ற போசாக்கின்மை பற்றி அறிந்து கொள்ள அவளால் இயலாமல் போய்விடுகின்றது. குழந்தைக்குப் போசாக்கின்மை உண்டென்பதைத் தாயினால் புரிந்து கொள்ள முடியுமேயானால் தன் குழந்தையை இதினின்றும் மீட்டெடுக்க அவளிற்கு இலகுவாகவே முடிந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் போசாக்கின்மையை உரிய காலத்திற்குள் அறிந்து கொள்வதற்கு இலகுவானதும் செலவற்றதுமான ஒரு வழிமுறையே குழந்தையின் "ஆரோக்கியப்திவேடு" அல்லது "வளர்ச்சி அட்டவணை" முறையைக் கைக்கொள் வதாகும். இன்றைய உலகில் எல்லா நாடுகளிலுமே இருநூறு வகையான பதிவேடுகள் இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு பிள்ளையின் நிறையில் ஏற்படுகின்ற மாற்றங்களே அப்பிள்ளையின் வளர்ச்சியையும் ஆற்றலையும் கணிப்பதற்கு நம்பகமான அளவுகோல் என மருத்துவ ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இப்பதிவேடுகள் குறித்த குழத்தையின் தரவுகளுடன் அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களின் ஆரோக்கிய நிலை, சிகிச்சை அளிக்கப்பட்ட முறைகள், பிள்ளைகளின் நோய்கள், குடும்பத்திட்ட ஆலோசனைகள், தொற்று நோய்களிற்கான தடை மருந்துகள் போன்ற பல விடயங்களையும் உள்ளடக்கி யதாக அமைகின்றன.

குழந்தையின் போசாக்கினைப் பேணுவதன் மூலம் அக்குழந்தையின் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரித்து நோய் அணுகா வண்ணம் பாதுகாத்துக் கொள்வது வறிய குடும்பங்களைச்சேர்ந்தோரின் நிலைக்கு அவசியமானதாகும். நோய் பீடித்ததன் பின்னர் குழந்தைக்குச் சிகிச்சை அளிப்பதைவிட நோயை வராமலேயே தடுத்துக் கொள்வது செலவீனத்தைத் தவிர்க்கவும், பாதுகாப்பை உறுதிப் படுத்தவும், சிறப்பான மார்க்கமுமாகும். மாதாந்த நிறையில் சராசரியைவிட குறைவு ஏற்படுமிடத்து உடனடியாகவே அக்குழந்தையின் போசாக்கை உயர்த்திக் கொள்வதற்கும் தாய் முற்படவேண்டும். பெரும்பாலும் போசாக்கின்மையால் பீடிக்கப்படும் குழந்தைகள் வாழும் வீடுகளில் குழந்தைகளிற்குத் தேவையான உணவு போதியளவில் இருப்பதாகவே எம்மால் அறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலஸ்ரம்' தடுப்பு மருந்து

குழந்தைக்கு தொற்று நோய்களும் ஏனைய உபாதைகளும் பீடிக்காது பாதுகாப்பு அளிக்கக்கூடிய வலிமையான சூழலையும், முழுமையான ஆகாரத்தையும் தாய்ப்பாலே வழங்குகின்றதென குழந்தைகள் போசாக்கு, ஆரோக்கியம் வளர்ச்சி ஆகிய துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். குழந்தைக்குப் பிறந்த உடனேயே "கொலஸ்ரம்" என்னும் கடும்புப் பாலைக் கொடுப்பதன் மூலம் அதிலுள்ள நொதியங்களும், வெண்குருதிச் சிறுதுணிக்கைகளும், பிறபொருளெதிரிகளும், பக்ரீரியா, வைரஸ் போன்றவற்றால் ஏற்படும் துன்பங்களினின்றும் குழந்தைகளைக் காக்கும் முதலாவது தடுப்பு மருந்தாகப் பயன்படுகிறது.

பெரும்பாலான வைத்தியசாலைகளும் பிரசவ விடுதிகளும் தாய்மார் தம் பிள்ளைகளிற்குப் பாலூட்டுவதை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, பிறந்த பிள்ளைகளிற்குப் பாலூட்டும் சந்தர்ப்பம் கிடைக்குமுன்னரே அதுவும் கடும்புப் பாலை அளிக்கவிடாது குழந்தையைத் தாயிடமிருந்தும் பிரித்து புட்டிப்பாலையோ வேறு திரவங்களையோ பருக்கிவிடுகின்றன. இரண்டு மாதப் பருவம் வரையான குழந்தைள் தாய்ப்பாலில் வளராவிட்டால் வயிற்றோட்ட நோய்க்கு இலக்காவது இருமடங்கு அதிகம் என்றும், இதன் காரணமாக மரணிப்பது 25 மடங்கு அதிகம் என்றும் இதனால் உலகெங்கணும் பல மில்லியன் சிறுவர்கள் இறக்கின்றனர் எனவும் உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகின்றது.

பிறந்த குழந்தையின் முதல் நான்கு மாதங்களும் அதன் போசாக்குத் தேவை அனைத்தையும் தாய்ப்பாலே பூர்த்தி செய்கின்றது. மன்காட்டன், நியூயோர்க், பாரிஸ், ரோம் போன்ற செல்வ வளமிக்க நகர்களில் உள்ள ஒரு தாயின் பாலைவிட ஆபிரிக்க நாடுகளில் உள்ள தாயின் பால் சக்தி மிக்கதும் செழிப்பானதுமாகும் என ஆய்வாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து வெளியிட்டு வருகின்றார்கள். இவ்வாறு இருக்கையில் ஆபிரிக்க நாடுகளின் கிராமப்புறங்களிலேயே மிகப் பெரும் சதவீதமான சிறுவர்கள் மத்தியில் போசாக்கின்மை இருக்கின்றமைக்கு இப்பகுதியிலுள்ள பெண்கள் மத்தியில் தாய்ப்பாலின் முதன்மை பற்றிய தெளிவின்மையே காரணமாகின்றது.

## தாய்ப்பாலிற்கு மாற்றீடா?

பொருளாதார வளர்ச்சி நிலைகள் எதுவாக இருப்பினும் பெண்களில் பெரும் சதவீததினர் இன்று வீட்டிற்கு வெளியே தொழிலுக்குச் செல்வது சாதாரணமாகிவிட்ட காரணத்தினால் இவர்களினால் தம் பிள்ளைக்குத் தேவையான பாலை ஊட்ட முடிவதில்லை. எனவே இலாப நோக்குக் கொண்ட கம்பனிகள் சில தாய்ப்பாலிற்கான மாற்றீடாக புட்டிப்பாலை அறுபதுகளில் அறிமுகம் செய்து தமது கவர்ச்சிகரமான விளம்பர உத்திகளினால் உலகளாவிய சந்தை ஒன்றை தமக்கென உருவாக்கிக் கொண்டன. இதன் விளைவாக கடந்த மூன்று தசாப்த காலத்தில் பிறந்தவர்களில் அரைப்பங்கிற்கும் மேலான எண்ணிக்கையினர் முழுமையான தாய்ப்பாலில் வளரும் சந்தர்ப்பத்தை இழந்து விட்டார்கள்.

தாய்ப்பால் ஊட்டுவதைக் கைவிடச் செய்யும் சக்திகளின் மாயைகளிற்குப் பலியான வளர்முக நாடுகளின் ஏழைகளும், கல்வியறிவு குறைந்தோரும், தம்மிடம் தாய்ப்பால் ஊட்டும் வளமிருந்தும், போதிய கால அவகாசம் இருந்தும்கூட, தங்கள் பிள்ளைகளிற்குப் புட்டிப்பாலைத் தேடியே அலைகின்ற நிலையை நாம் காண்கின்றோம். தாய்ப்பால் ஊட்டுவதை அவமானகரமான நடவடிக்கை என்று எண்ணும் மனோநிலை பெரும்பாலான வளர்முக நாடுகளின் நகர்ப்புறங்களிலும் மத்தியதர வர்க்கத்தினரிடமும் இருப்பதை எம்மால் அறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ள கிராமப்புற ஏழை விவசாயிகளிற்கும் நகர்ப்புற சேரி மக்களிற்கும் இல்லாமையின் மத்தியிலும் தங்கள் குழந்தைகளின் போசாக்குத் தரத்தைப் பேண தாய்ப்பாலூட்டும் நடைமுறை இயற்கையானதும் பாதுகாப்பானதும், நடைமுறைச் சாத்தியமானதும், சிக்கனமானதுமாகும் என்ற உண்மையை உணரச் செய்தல் வேண்டும். தாய்ப்பாலூட்டப்பட்ட குழந்தைக்கு நான்கு மாதங்களின் பின்னர் ஏனைய உணவுகளை படிப்படியாக அறிமுகம் செய்தாலும் குறைந்தது பன்னிரண்டு மாதங்களுக்காவது தாய்ப்பாலையும் சேர்த்து வழங்க வேண்டும். கொலம்பியா, மலேசியா, பனாமா, ஜமேகா, கோஸ்ராறிக்கா போன்ற நாடுகளில் சராசரியாக பாலூட்டும் காலம் பத்து மாதங்களிற்குக் குறைவாகவே அமைந்தள்ளது.

மேலைத்தேய நாகரிகங்களின் ஊடுருவல் களிற்குப் பலியாகிவிட்ட வளர்முக நாடுகளின் நடுத்தர வர்க்கத்துத் தாய்மார் தம் குழந்தைகளிற்குப் பாலூட்டுவது உடல் உபாதையானது, தமது உடலின் ஆரோக்கியத்திற்கு தீங்கானது, பெருமளவு நேரத்தை விரையமாக்குவது, பொறுமைக்குச் சோதனையாவது, சுதந்திரமான தமது செயற்பாடுகளிற்கு தடையானது என்றெல்லாம் குறுகிய கருத்துக்களைக் கொண்டு புட்டிப்பாலையே ஊட்டி வருகின்றார்கள்.

## மாறிவரும் மேற்குலகு

ஐக்கிய அமெரிக்காவில் பிறந்த குழந்தைகளில் நான்கில் ஒருவரே எழுபதுகளில் தாய்ப்பால் பருகும் உரிமை பெற்றிருந்ததுடன், ஆக பத்து சதவீதத்தினரே மூன்று மாதங்களிற்கு மேலும் இவ்வுரிமையை அனுபவித்தவர்கள் என்பதும் சென்ற காலவரலாறு. இதே போன்றே சுவீடனில் 65 சதவீதத்தினரும் நெதர்லாந்தில் 89 சதவீதத்தினரும் தாய்ப்பாலின் சுவையை தெரியாது அக்காலப் பகுதியில் இருந்தனர். நவீனமயம் என்ற பெயரால் உற்பத்தித் துறைகளில் தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் சுதந்திரம், சமத்துவம், உரிமைகள் என்ற முனைப்புடன் களம் குதித்த இத்தாய்மார் தம் விடுதலையின் சின்னமாக பாற்போத்தல்களையே கண்டார்கள்.

இப்போக்கின் பயங்கரமான விளைவுகளைப் புரிந்து கொண்ட இப்பெண்கள் கடந்த பத்தாண்டுகளாக தம் போக்கில் தளர்வைக் காட்ட முற்பட்டமையே எல்லாத் தொழில்மய நாடுகளிலுமே எம்மால் இன்று காணமுடிகின்றது. நோர்வே. சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகளின் இன்று பிறக்கின்ற குழந்தைகளின் 90 சத வீதத்திற்கும் மேற்பட்ட சதவீதத்தினர் தாய்ப்பாலைப் பருகும் தம் சுதந்திரத்தை நிலைநாட்டி விட்டார்கள். இந்நூற்றாண்டின் இறுதிக்குள் அனைத்துக் குழந்தை களிற்கும் தாய்ப்பால் என்ற இலக்கினை அடைவதில் சகல நாடுகளுமே பற்றுறுதியுடன் செயற்பட்டு வருகின்றன. ஆனால் வளர்முக நாடுகளின் உள்ள பெண்களின் கல்வியறிவு பற்றாமையும், போதிய அறிவுறுத்தல் களுக்கான பொதுஜன ஊடகங்களின் வசதிக்குறைவும் ஏராளமான குழந்தைகள் தாய்ப்பாலைப் பெற வசதியற்றவர் களாக்கி உள்ளன.

குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள பிணைப்பு மனித தோற்றத்துடனே உருவாகிய ஒன்றாயினும் குழந்தை பிறந்த முதற்சில மணிநேரமே ஒருவரில் ஒருவர் தமது உணர்வையும், மனத்தையும் கட்புல உருவத்தையும் பதித்துக் கொள்ளும் சந்தர்ப்பமாக அமைகின்றது. இந்த உறவே அவர்களின் ஆயுட்காலத்தில் அழியாத ஆக்க பூர்வமான உறவாக அமைகின்றது. எனவே சிறுவர்கள் மனித நேயம் மிக்கவர்களாக எதிர்காலத்தில் உருவாக ஆரம்ப காலத்தில் அவர்கள்பால் மனித நேயத்தை தாய்மார் ஊட்டுதல் வேண்டும். மேற்கு நாட்டுச் சிறுவர் களிடையே கடந்த காலத்தில் வலுப்பெற்ற சமுதாயம் மேலான வெறுப்பிற்கு அடிப்படை இதுவே என்பது உணரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்து சதத்திற்கு ஓர் உயிர்

எண்பதுகளில் ஆறு மில்லியனுக்கும் அதிகமாக இருந்த வயிற்றோட்ட நோய்க்குப் பலியான 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவுற்று இன்று மூன்று மில்லியன்களாகி உள்ளமைக்கு விஞ்ஞான, மருத்துவ, தொழில் நுட்பத்துறையினர் அளித்த "வாய் வழி மீழ நீர் வழங்கும் சிகிச்சை முறை"யின் பரவலான பிரயோகமே காரணமாக அமைந்தது. மிகவும் இலகுவாகக் கிடைக்கக் கூடியதும், செலவற்றதும் பிரயோகத்திற்கு எந்தவித தொழில்நுட்பமும் தேவையற்றதுமான இச் சிகிச்சை முறை இந் நூற்றாண்டின் இறுதிக்குள் உலகின் 90 சதவீதமான மக்களைக் கைதேர்ந்த வைத்தியர்களாக்கி விடுமளவிற்கு விரிவுற ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் முன்னின்று உழைத்து வருகின்றது.

மிகவும் அண்மைக்காலம் வரை உட்கொண்ட உணவின் ஒவ்வாமையே வயிற்றோட்டம் ஏற்படக்காரணம் என சாதாரண கிராமப்புற மக்கள் கருதியிருந்த நிலை தற்போதுதான் மாற்றம் பெற்று இதுவும் ஒரு பக்ரீரியாவின் தாக்கத்தினால் உருவாகும் நோயே என்ற உண்மை அங்கீகாரம் பெற்று வருகின்றது. இதே போன்றே குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டால் தாய்ப்பால் ஊட்டுவதும், நீராகாரம் கொடுப்பதும் நோயை மேலும் அதிகரிக்கவே செய்யும் என்ற பல்லாண்டுகள் பழமை வாய்ந்த கருதுகோள் தவறானது என்ற உண்மையும் மெல்ல மெல்லப் பரவி வருகின்றது. போசாக்கு இன்மைக்கு உட்பட்ட பிள்ளை வயிற்றோட்ட நோய்க்கு உள்ளாவதும், வயிற்றோட்ட நோய் பிடித்த பிள்ளை போசாக்கின்மைக்கு உட்படுவதுமென ஒன்று மற்றொன்றின் முன்னோடியாக அமைகின்றது.

குடும்ப வறுமையால் தோற்றம் பெறும் போசாக்கின்மையும், நோய் எதிர்ப்பாற்றல் அற்ற நிலையும், பாதுகாப்பான குடிநீரின்மையும், பழையதும் நன்கு சமைக்கப்படாததுமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவும், அசுத்தமான பாத்திரங்களின் பிரயோகமும், சுற்றாடலும், ஆரோக்கியமான வதிவிட வசதியோ, மலசலகூட அமைப்பின்மையும் இந்நோய் பற்றிய பரம்பல் காரணிகள் யாவை என்பதோ, சிகிச்சை முறை யாது என்றோ அறிவுபெறாப் பெற்றோர்களும் இந்நோய் உருப்பெற்று விரைவான தாக்கம் ஏற்படக் காரணமாகின்றன.

வெள்ளப்பெருக்குக்கு உள்ளாகும் ஈரவலையப் பிரதேசங்களான தெற்காசிய நாடுகளிலும், தென் சகாரா நாடுகளிலும் பெருமளவில் காணப்படும் இந்நோய் வங்களாதேஷில் பிறக்கின்ற குழந்தைகளில் 10 சத வீதத்தினரைப் பலி கொள்வதுடன், 0.5 மில்லியன் ஒரு வயதிற்குட்பட்ட பிள்ளைகளைச் சராசரியாக ஐந்து தடவைகள் சிகிச்சை பெறவும் செய்கிறது. 1994ல் 162 நாடுகளில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி நூற்றாண்டின் இறுதிக்குள் 44 நாடுகள் முழுமையாக இச்சிகிச்சை முறையை அறிமுகம் செய்யும் சக்தி பெற்றுள்ளதெனவும், 46 நாடுகள் மேலதிக பிரயாசையுடன் இதனை அடைய முடியும் என்றும் அறிய முடிகின்றது. எனினும் மொத்தமாக வளர்முக நாடுகளின் மக்களில் 44 சத வீதத்தினர் இன்று இச்சிகிச்சை முறையைக்கைக்கொள் கிறார்கள். குளுக்கோஸ், சோடியம் குளோரைட், சோடியம் பைகாபனேட், பொற்றாசியம் குளோரைட் என்பன கொண்ட இக்கலவை சிறு சிறு பைக்கற்றுக்களில் 10 சதத்திற்குள் பெறும் வகையில் 38 நாடுகள் ஆண்டுக்கு 260 மில்லியன் பைக்கற்றுக்களை உற்பத்தி செய்கின்றன. இவை கிடைக்கப் பெறாவிட்டால் வீடுகளிலேயே சுத்தமானநீர், சீனி, உப்பு, கரட், ஜாம், போன்றவற்றின் துணை கொண்டு இவ்வாறான பதார்த்தத்தைத் தயாரித்துக்கொள்ளலாம்.

## நோய்கள் ஆறு

எண்பதுகள்வரை ஆண்டுதோறும் நாளொன்றிற்கு 13,000 க்கும் அநேகமான சிறுவர்கள் சின்னமுத்து, குக்கல், ஈர்ப்புவலி, தொண்டைக்கரப்பன், இளம்பிள்ளைவாதம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாசத்தடை போன்ற ஆறுநோய்களினால் தாக்கத்தைப் பெற்று இறந்துவந்ததுடன் மேலும் இதே எண்ணிக்கை யானோர் முடம், குருடு, செவிடு போன்ற அங்கக் குறைபாடுகளுக்கு ஆளாகியுயும் வந்தனர். இக்காலப்பகுதியில் இந்நோய்களிற்கான தடுப்பு மருந்து ஏற்றுதல் அறிமுகமாகியபோதிலும் உலகச்சிறுவர்களில் பத்து சதவீதத்தினர் மட்டுமே இத்தடுப்பு முறைகளைப் பெற்றுக்கொண்டநிலை இன்று மாற்றம்பெற்று 60 சதவீதத்தினர் பெற்றுக்கொள்ளும் வகையில் விரிவுற்றுள்ளது. இதனால் ஆண்டுக்கு 3 மில்லியன் சிறுவர்களின் மரணம் தடுக்கப்பட்டுள்ளதுடன் ஏராளமான சிறுவர்களின் அங்கவீனமும் தவிர்க்கப்பட்டுள்ளது.

அம்மை நோய், வளர்ந்து வரும் நாடுகளின் பெருபாலான பகுதிகளில் சிறுவர்களை பீடிப்பது சாதாரணமாகவே கருதுமளவிற்குப் பெருகி ஒரு பகுதியினர் குணமடைய இன்னோர் பகுதியினர் எடை குறைந்தும், விற்றமின் ஏ சக்தியினை இழந்தும் தொடர்ச்சியான வேறு நோய்களிற்கும் உட்படலாயினர். இவற்றின் மொத்த விளைவாக ஏராளமான சிறுவர்கள் கண்பார்வை இழந்தும், செவிப்புலனற்றும் வலுவற்றோராயினர். சிறுவர்களைப் பீடிக்கும் இரண்டாவது பெரிய தொற்று நோயான இது ஆண்டிற்கு 2.5 மில்லியன் எண்ணிக்கையானோரைப் பலி யெடுப்பதுடன் 2 மில்லியன் சிறுவர்களை வலுவற்றோரா க்கியும் வருகின்றது. இன்று இந்த நோயினால் பாதிக்கப்படுவோர் தொகை 95 சத வீதத்தினால் வீழ்ச்சி பெற அம்மைத் தடுப்பு மருந்து ஏற்றல் உதவியுள்ளது.

எழுபதுகளில் ஆண்டுதோறும் இளம்பிள்ளைவாத நோயினால் பீடிக்கப்பட்டு வந்த 6 மில்லியன் சிறுவர்களில் இன்று 4 மில்லியன் சிறுவர்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றார்கள். இன்னும் இரண்டு ஆண்டுகளில் உலகில் பிறக்கின்ற அனைத்துச் சிறுவர்களும் இதற்கான தடுப்பு மருந்து ஏற்றிக்கொள்ளும் நிலையை அடைய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று போலியோ வைரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடிக்கப்பட்ட பல மில்லியன் சிறுவர்கள் அதுபற்றித் தெரிந்துகொள்ளாமலே பயனடைந்து வருகின்றார்கள்.

இன்று உலகில் 600,000 மரணங்கள் ஏற்படுவதற்குப் பிரசவகால ஈர்ப்புவலியே காரணமெனக் கருதப்படுகின்றது. உடன் பிறந்த சிசுக்களே பெருமளவில் பலியாகி வந்தனர். இது மிகவும் மறைமுக நோய்களில் ஒன்றாக விளங்கு வதுடன், கொடுமையின் ஆரம்பம் சிசுவின் புன்னகை யுடனேயே ஆரம்பிக்கின்றது. நோய் பீடித்து 3-4 நாட்களில் பெரும்பான்மையான சிசுக்கள் இறந்து விடுகின்றன. கர்ப்பிணிகளுக்கும் சிறுவர்களுக்கும் ஈர்ப்பு வலிக்கு எதிரான தடை மருந்து பயன்படுத்தும் நிலையை உலக நாடுகளில் 18 தவிர்ந்த ஏனைய நிறைவு செய்யு மளவிற்கு வந்துவிட்டன.

இதே போன்றே சீதச்சன்னியும் சிறுவர்களைப் பயங்கரமாகத் தாக்கும் இந்னோர் நோயாகும். அன்ரிபயடிக்ஸ் எனப்படும் செலவு குறைந்த மருந்துகளை உரிய வேளையில் கொடுத்தால் இந்நோய் தொற்றுவதைத் தடுத்து ஏராளமான மரணங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

## போசாக்குக் குறைபாடு

போதிய உணவை உண்பது மட்டும் உடல் ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பானதன்று என்பதும் குறித்த சில சத்துக்கள் எமது உணவில் குறிப்பிட்ட அளவுகளில் இடம் பெறுவதும் முக்கியம் என்பதும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமது உணவில் சிறிதளவு அயடீன் சேர்க்கப்படாமையால் உலகில் வாழும் மக்களில் 1,6000 மில்லியன் எண்ணிக்கையிலானோர் குறிப்பாக மலைப் பிரதேசங்களிலும் வெள்ளப் பெருக்குள்ள பிராந்தியங் களிலும் வாழ்வோர் அபாயகரமான நிலையில் வாழ்கின்றார்கள். 655 மில்லியன் மக்கள் தொண்டைக் கழலைக்கு உட்பட்டும் 28 மில்லியன் தொகையினர் உளவியல் ரீதியில் வளர்ச்சி குன்றியும் உள்ளனர். 60,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருச்சிதைவுகளுக்கும், 120,000 அங்கவீனங்களுக்கும் இதுவே காரணமாகின்றது. இன்று உலகில் 75 மில்லியன் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மந்தபுத்தியினராகவும் 2 மில்லியன் எண்ணிக்கையிலானோர் அங்கவீனர்களாகவும் உருவாக அயடீன் பற்றாக்குறை காரணமாகின்றது. கறியுப்பில் அயடீனைச் சேர்ப்பதன் மூலம் ஓர் ஆளிற்கு ஒரு ஆண்டிற்கு அமெரிக்க சதம் 05ஐ செலவு செய்து பல்லாயிரக்கணக்கான சிறுவர்களின் உயிர் வாழ்வையும், எதிர்கால ஆரோக்கியத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். நூற்றாண்டின் இறுதிக்குள் சகல மக்களும் அயடீன் கலந்த உப்பையே பெறுவார்கள் என்ற இலக்கைநோக்கி இன்றைய செயற்பாடுகள் அமைந்து வருகின்றன.

வளர்முக நாடுகளைச் சேர்ந்த 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களில் 0.5 மில்லியன் தொகையினர் ஆண்டு ஒன்றிற்கு இறக்கவும் கண்பார்வை அற்றவர்களாகவும் உருவாகுவதற்கு உயிர்ச்சத்து 'ஏ' போதியளவில் இன்மையே காரணமாகின்றது. இச் சத்துக் குறைவாகவுள்ள பிள்ளைகளுக்கு வயிற்றோட்டம் அல்லது அம்மை நோய் பீடிக்கும் போது அக்குழந்தை தன் உயிர்ச்சத்து 'ஏ' முழுவதையுமே இழந்து விடுகின்றது. இதுவும் அயடீன் பற்றாக்குறை போன்றே உணவில் கீரை வகைகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலமும் அல்லது விட்டமின் 'ஏ' குளிசைகளை அளிப்பதன் வாயிலாகவும் குறைந்த செலவில் இலகுவில் தீர்வு காணக்கூடியதாகும். இதன் குறைபாட்டால் பாதிக்கப்படும் சிறுவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் வாழும் 35 நாடுகளில் இவ்வாண்டு இறுதிக்குள் சகல சிறுவர்களும் விட்டமின் 'ஏ' சக்தியைப் பெற்றவர்களாக ஆக்கப்படுவார்கள். சீனியில் விட்டமின் 'ஏ'யை கலப்பதன் மூலம் கௌதமாலா இதில் பூரண வெற்றியை ஈட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வளர்முக உலகில் பத்தில் நான்கு பெண்கள் சாதாரண பலவீனத்திற்கும், கர்ப்பிணிகளில் சரிபாதிக்கும் அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானோர் இரத்தச்சோகை உபாதைகளிற்கும் உள்ளாக இரும்புச்சத்துக் குறைபாடு காரணமாகின்றது. முதிராக் குழந்தைகள், இரத்தச்சோகையுள்ள தாய்மாரின் பிள்ளைகள், நீண்ட காலமாக வேறு உணவுகளை ஊட்டாது புட்டிப்பாலையே கொடுத்து வரப்பட்ட பிள்ளைகள், இரும்புச்சத்து நிரம்பிய கலப்பு ஆகாரத்தைப் பெறாத பிள்ளைகள், மலேரியா கொழுக்கிப்புழு போன்ற ஒட்டுண்ணிகளில் இருந்தும் பாதுகாக்கப்படாத பிள்ளைகள் என வளர்முக உலகில் பல மில்லியன் சிறுவர்கள் அன்றாடப் பணிகளை நிறைவேற்ற இயலாதவர்களாக உள்ளமைக்கு இதுவே காரணமாகின்றது. இலகுவானதும் செலவு குறைந்ததுமான பெரசல்பேட் வில்லைகள் இதற்குச் சிறந்த மாற்றீடாக அமைவதுடன் மரக்கறி, இலை வகைகள், தானியங்கள், சர்க்கரை போன்றவற்றினை போதியளவில் உணவில் சேர்த்துக் கொள்ளுதலும் வேண்டும்.

ஐந்து வயதிற்குட்பட்ட சகல சிறுவர்களிலும் மூன்றில் ஒரு பங்கினர் புரதச்சத்துப் போசாக்கின்மையால் பாதிக்கப் படுகின்றனர். குறிப்பிட்ட ஓர் ஊட்டப் பொருள் பற்றாக்குறையாக அமைவதால் மட்டுமன்றி, சக்தியற்ற உணவு, அடிக்கடி ஏற்படும் நோய் என்பவற்றாலும் இக் குறைபாடு உண்டாகின்றது. இப் போசாக்கின்மையை கணிசமான அளவில் குறைப்பதற்கு இன்றைய அறிவாற்றல், குறைந்தளவிலான பொருளாதார வளர்ச்சி மட்டத்திற்கூடப் போதுமானதென்று சிறுவர்களிற்கான உலக உச்சி மகாநாட்டிலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிறுவர் புரதச்சத்து இன்மையை சரிபாதியாகக் குறைப்பதென்ற உடன்பாடான இலக்கினை நோக்கி வளர்முக உலகின் அரைவாசிக்கும் அநேகமான நாடுகள் முன்னேறி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாண்டுகால சாதனைகள்

1990ல் உலகச் சிறுவர் மாநாடு முன்வைத்த மேம்பாடு தொடர்பான பல்வேறு இலக்குகளையும் செயலாக மாற்றுவதில் பிரதான அம்சமாக விளங்கியது. அந்த இலக்குகளில் நம்பிக்கை வைத்து அவற்றை அடையும் பொருட்டுத் திட்டமிட்டு வாதாடி விடாது உழைத்த பல நூற்றுக்கணக்கான நிறுவனங்களிலும், பல்லாயிரக் கணக்கான தனி மனிதர்களினதும் முயற்சியாகும். திட்டவட்டமான இலக்குகளும் கால வரையறையும் நிர்ணயிக்கப்படாதிருந்தால் இதுவரை விடுக்கப்பட்ட சாதனைகள் கூட சாத்தியமற்றதாய் இருக்கும்.

1995ம் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் பெரும்பாலானவற்றையும் வளர்முக உலகின் அரைப் பங்கிற்கும் அதிகமான நாடுகள் அடைந்துவிட்டன. போசாக்கின்மை குறைக்கப்பட்டுள்ளது.தடுப்பு மருந்தேற்றும் எல்லைகள் பேணப்பட்டோ அதிகரித்தோ வருகிறது, சின்னமுத்துவினால் ஏற்படும் மரண விகிதாசாரம் 80 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.வளர்முக உலகின் அநேகப் பகுதிகளில் இளம்பிள்ளைவாதம் இல்லாது போய்விட்டது, அயடீன் பற்றாக்குறைக் கோளாறுகள் ஒழிக்கப்பட்டு வருகின்றன.விட்டமின் ஏ பற்றாக்குறை பின்வாங்கி வருகிறது, வாய்வழி மின் நீர் ஊட்டும் சிகிச்சை முறை பெருகி வருகிறது, இனிப்புழு நோய் சுமார் 90 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதுடன் முழுமையாக ஒழிக்கப்படும் காலம் நெருங்கி வருகிறது, வளர்முக நாடுகளிலும் தொழில்மய நாடுகளிலும் பல்லாயிரக் கணக்கான வைத்தியசாலைகள் தாய்ப்பாலூட்டும் வழக்கத்தினை தீவிரமாக ஊக்குவித்து வருகின்றன, ஆரம்பக் கல்வித்துறை மீளவும் முன்னேற்ற மடைந்து வருகின்றது, சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனம் வரலாற்றில் மிகப் பரவலாகவும் துரிதமாகவும் அங்கீகாரம் பெற்றுப் பிரகடனமாகப் பரிணமித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தும், செயற்படுத்தக் கூடிய உத்திமுறைகளை இனம் கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தியமையால் பெறப்பட்ட பலாபலன்களே ஒழிய நிரந்தரமான விடிவுக்கான சமூக மேம்பாட்டில் குறிப்பிடும்படியான எதனையும் சாதித்ததாகத் தெரியவில்லை. ஆனால் சமூக முரண்பாடுகளைக் களைவதற்கான எதிர்காலத் திட்டமிடலுக்கும் செயலாற்றத்திற்குமான வலிமை கொண்ட ஊடுவழிகளாக இவை அமையும் என்பது மறுப்பதற்கில்லை.

ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த போசாக்கற்ற சிறுவர்களின் போசாக்கு நிலையை உயர்த்துவதற்கு இலவசமாக விநியோகிக்கும் 'திரிபோசா' (சோயா அவரை மா) உண்மையில் சிறுவர்க்கு ஆரோக்கியத்தை அளிக்கின்றது. எனினும் இது அதே ஏழைக் குடும்பத்தில் பிறக்கும் அடுத்த பிள்ளைக்கு இயற்கையான போசாக்கை அளிக்கும் வலிமை கொண்டதா? எனவே அடிப்படைப் பிரச்சினையை தூர வைத்துவிட்டு கண்ணுக்குப் புலனாகும் நடைமுறை அம்சங்களையே இத் தொழில்நுட்ப சாதனைகள் அணுகியுள்ளன.

## இதற்கும் சில தடைகள்

ஒரு சில நகரங்களிலும் பட்டினங்களிலும் அமையப்பெற்ற நவீன வைத்தியசாலைகளினால் பரந்தவொரு பிரதேசத்தில் வாழும் பல மில்லியன் எண்ணிக்கையான சிறுவர்களிற்கு ஆண்டிற்கு ஐந்து - ஆறு தடவைகள் பணியாற்றுவது சாத்தியமானதன்று. சிகிச்சை நிலையங்களிற்கு வருவோரை விடப் பலமடங்கு சிறுவர்கள் வாழும் கிராமப்புறங்களையும் எல்லைப் பிரதேசங்களையும் ஆரம்ப சுகாதார வசதிகள் சென்றடையக்கூடிய வகையில் இத்துறையை மீளமைக்கும் பணி எம்முன் தோன்றுகிறது. முன்னர் போன்று வைத்தியசாலைகள், மருத்துவமனைகள், பிரசவ விடுதிகள், ஊழியர் விடுதிகள், மின்சார தொழிநுட்ப சாதனைகள் என எந்தவிதமான ஆடம்பரங்களுமின்றியே குறைந்த செலவில் சமூகசேவை நிலையங்களை அமைத்தும், தற்போதுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பொதுநிறுவனங்களை விரிவுபடுத்தியும் செயற்பட்டாலே போதுமானது.

இன்று எமது அரசுகள் ஐந்தாண்டுகளுக்குப் பொதுமக்களின் பணம் 60000 டொலர்கள் வரை செலவு செய்து ஒரு டாக்டரை உருவாக்கிய போதிலும் அவர்கள் தம்மை உருவாக்கிய மக்களுக்குச் சேவை செய்வதை விடுத்து பட்டினங்களிலும் நகரங்களிலும் சொந்தத் தொழில் புரியவும், மேற்கு நாடுகள் சென்று கைநிறையச் சம்பாதிக்கவுமே முற்படுகிறார்கள். வளர்முக நாடுகளில் தற்போது பயிற்றப்படும் டாக்டர்களின் தொகையை 5 சதவீதத்தினால் குறைத்தால், கிராமப்புற இளைஞர்கள் 400,000 பேரை மூன்றுமாதப் பயிற்சியுடன் ஆரம்ப சுகாதாரசேவை ஊழியர்களாக்கிவிட முடியும்.

ஆண்டுதோறும் 600,000 பெண்கள் கற்பகாலக் கோளாறுகள், பிரசவச் சிக்கல்கள், பாதுகாப்பற்ற கருச்சிதைவுகள் ஆகியவற்றால் பலியாவதுடன் இதிலும் பல மடங்கு தொகையினர் உடற்சேதம், ஊனம் ஆகியவற்றிற்கு உள்ளாகிறார்கள். இந்தக் கர்ப்பங்களில் அரைப்பங்கிற்கும் மேலானவற்றை பயிற்சி பெற்ற மருத்துவ பிரசவ மாதின் துணை கொண்டு இலகுவாகவே தவிர்த்துக் கொள்ள முடியும். இங்கும் கல்வியறிவு ஓரளவுடைய கிராமியப் பெண்களைத் தேர்ந்தெடுத்து குறகிய காலப் பயிற்சியுடன் நிறைவான சேவை வசதியை கிராமிய மக்களிற்கு அளிக்கலாம்.

கிராமிய மட்டத்தில் இவ்வாறு உருவாகும் ஊழியர்களின் துணையுடன் அவர்களது சேவைக்குட்பட்ட பிராந்தியப் பெண்களிற்கு கூட்டாகவோ குழுக்களாகவோ அல்லது தனித்தோ வாய்வழி மின் நீர் வழங்கும் சிகிச்சை முறை, ஆறு முக்கிய நோய்களுக்கான தடுப்பு மருந்து பாவிப்பதன் அவசியம், சத்துணவின் தேவை, சத்துணவை எளிய முறையில் குறைந்த செலவில் தெரிவு செய்யும் வழிமுறைகள், தாய்ப்பாலூட்டலின் முக்கியத்துவம், சுத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணல், கருவளத்தைக் கட்டுப்படுத்தல், பேறுகால இடைவெளியை அதிகரித்தல், வீட்டுப்பராமரிப்புப் போன்ற விடயங்களில் போதிய அறிவை ஊட்டுதல் வேண்டும். வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள சிறுவர்கள் அனுபவித்து வரும் இன்னல்களுக்குத் தீர்வுகாண பெற்றதாயும் சுகாதாரத்துறையின் ஆதரவும் மட்டும் போதுமானதன்று. பெண்கள் தம் கல்வித் தரத்தை உயர்த்திக் கொள்வதன் மூலம், சமூகத்திலும் தன் குடும்பத்திலும் பல விடயங்களில் சுதந்திரமாக முடிவெடுக்கும் வலிமை பெற்றோரால் உருவாக்கப்பட வேண்டும். ஒரு தந்தையின் தொழில் உழைப்பையோ அல்லது கல்வி அறிவையோ விட ஒரு தாயின் கல்வியறிவு சிறுவர்கள் வாழ்வில் மிக உயர்வானது என்பது சமூகவாரியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இலட்சியபூர்வமாக நோக்கினால் குடும்பத் திட்டத்தின் விரிவாக்கமும், சனத்தொகை வீழ்ச்சியும்,சிறுவர் நலனும் பெண்களின் அடிப்படை உரிமைகளையும் தேவைகளையும் ஈட்டியதன் விளைவாக அமைய வேண்டுமேயல்லாது, அவற்றின் உந்து சக்தியால் ஏற்பட்டவைகளாக அவை இருக்கக் கூடாது.

சிறுவர் முன்னேற்றம் தொடர்பான விடயங்களையிட்டு சமீப ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், சாதிக்கக்கூடியவை கூட கைகூடாமற் போனதற்கு குறித்த சில தேசிய அரசுகளின் முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்காமற் போனமையே காரணம் என்ற உண்மையை சுட்டிக்காட்டியுள்ளன. பொதுவாக நாடுகளின் அரசியலில் கருமுகில்கள் தோன்ற ஆரம்பித்ததும் சமூக இலக்குகள் அனைத்தும் இடம் தெரியாமல் மறைந்துவிடும் நிலையே வளர்முக உலகில் காணப்படுகின்றது. சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம் அந்த இலக்குகளை மீளவும் முன்னணிக்கு இழுத்துவர வேண்டியுள்ளது. உதாரணமாகக் கடந்த பத்தாண்டுகளில் ஆபிரிக்க நாடுகளில் 70ற்கு மேற்பட்ட அரசத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் கொல்லப்பட்டோ பலாத்காரமாக அகற்றப்பட்டோ நிலையற்ற அரசுகள் அமையக் காரணமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செலவீன மறுசீரமைப்பு

1990ல் சிறுவர்க்கான உலக வங்கி மாநாட்டிலே தொழில்மய நாடுகள் தம் சொந்தச் சிறுவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை மீளாய்வு செய்ததுடன் வளர்முக நாடுகள் தம் இலக்கினை அடைவதற்கு உதவும் வகையில் உதவித் திட்டங்களைப் புனர் அமைப்பிற்கு உட்படுத்துவதெனவும் வாக்குறுதி அளித்தன.ஆனால் உதவிகளின் மீள் அமைப்புச் செய்தமைக்கான ஆதாரங்களைக் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் எம்மால் அறிய முடியவில்லை.இன்று இத்தொழில்மய நாடுகள் தமது மொத்தத் தேசிய வருமானத்தில் சராசரியாக 29 சதவீதத்தையோ தமது உதவித் தொகையாக வழங்குகின்றன.ஆனால் இதே ஐந்தாண்டுகளில் 3000 மில்லியன் டொலர்களாக இருந்த அமைதி காக்கும் பணிக்கான செலவீனம் இன்று 36,000 மில்லியன் டொலர்களாக உயர்வுற்றுள்ளது.

ஜனநாயகம், சமாதானம், மனித உரிமைகள் என்றெல்லாம் வளர்முக நாடுகளின் உதவித் திட்டங்களிற்கு நிபந்தனைகள் விதிக்கும் ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், இத்தாலி, ஜேர்மனி, ருஷியா போன்ற தொழிநுட்ப நாடுகள் பயங்கரமான அழிக்கும் ஆற்றல் மிக்க ஆயுதங்களை வளர்முக நாடுகளிற்கு ஏற்றுமதி செய்து தமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வது ஓர் இழிவான செயல் என்பதை இன்றுவரை உணர்ந்ததாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்முக நாடுகளிற்கான ஆயுதவிற்பனை (மில்லியன் டொலர்கள்)

| [illegible] | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|
| ருஷியா | 6500 | 1500 | 1000 | 4500 |
| ஐக்கிய அமெரிக்கா | 14500 | 14500 | 15500 | 6000 |
| பிரான்ஸ் | 1000 | 4500 | 4000 | 11500 |
| மே.ஐரோப்பா | 3500 | 4000 | 4600 | 1000 |

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆயுத விற்பனை கடந்த வீழ்ச்சியைப் பெற்றமைக்காக ஐக்கிய அமெரிக்காவின் காங்கிரஸ் கூட்டத் தொடரில் வருத்தம் தெரிவிக்கும் மனோநிலையைக் காண முடிந்ததேயொழிய, இவ்வாயுத வர்க்கத்தினால் மூன்றாம் உலக நாடுகளில் பெருகி வரும் இணைப்புக்களும், அங்கவீனங்களும், பொருளாதாரச் சீரழிவுகளும் குறைவதற்குத் தாம் வகிக்கக்கூடிய பங்கு பற்றி மகிழ்ச்சி கொள்வதைக் காணமுடியவில்லை.

இன்று உலகின் 64 நாடுகளில் மூன்று டொலர்கள் மட்டும் பெறுமதியான 110 மில்லியன் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.இவற்றை அகற்றி சுத்தம் செய்வதற்கு 25 ஆண்டுகள் காலமும் 55,000 மில்லியன் டொலர்களும் செலவிட வேண்டியுள்ளது. ஆசிய நாடுகள் மட்டும் சென்ற ஆண்டு 12,700 மில்லியன் டொலர்கள் பெறுமதி வாய்ந்த ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளன. தென்கிழக்கு, கிழக்காசிய நாடுகள் 15 இலும் 7,148,600 இராணுவ வீரர்களுக்கான ஆண்டுச் சம்பளம் மட்டும் 40,000 மில்லியன் டொலர்கள். நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியின் மிகப் பெரும் சதவீதத்தை மத்திய கிழக்கு நாடுகள் தமது போர் செலவீனமாகக் கொண்டுள்ளன. யப்பான் தனது தேசிய உற்பத்தியில் 1.2 சதவீதத்தையோ போர் சார்ந்த செலவீனமாகக் கொண்டிருக்க வடகொரியா 25.5 சதவீதத்தையும் மியான்மர் 10.8 சதவீதத்தையும் இதற்கெனச் செலவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>**விதைக்கப்பட்ட கண்ணிவெடிகள்**</u>

| | |
|---|---|
| கம்போடியா | - 10 மில்லியன் |
| ஒருவருக்கு ஒன்று | |
| அங்கோனா | - 15 மில்லியன் |
| ஒருவருக்கு இரண்டு | |
| ஆப்பானிஸ்தான் | - 10 மில்லியன் |
| பொஸ்னியா | - 6 மில்லியன் |
| மொஸாம்பிக் | - 2 மில்லியன் |

## தன்னல அக்கறைகள்

வறுமையை ஒழித்து, சிறுவர் நலன் காக்கும் பணிக்குத் தம்மை முழுமனத்துடன் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டிய அரசியல் தலைமைகள், தமது சுயநல அக்கறைகள் காரணமாகக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைக்கூட வேண்டுமென்றே புறக்கணித்தமைதான் வளர்முக நாடுகளின் வரலாறு. ஜனநாயகத்தின் பெயரால் ஏழைகளின் வாக்குகளைப் பெற்று அதிகாரத்திற்கு வந்ததும் அவர்களது நடவடிக்கைகள் அனைத்துமே வர்க்க நலன் காக்கும் நோக்கினதாகவே அமைகின்றன. இத்தன்னல நோக்கம் கொண்ட கூட்டத்தினருக்கு எதிராக நின்று கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிப்பது இலகுவான தொன்றன்று.

தேசிய செலவினங்களையும், உதவிப் பணங்களைச் செலவிடும் பாங்கையும் தம் விருப்பம் போல ஆட்டிப்படைத்த சுயநல சக்திகள் மாற்றங்கள் பற்றிய கருத்தொருமைப்பாடு ஏற்படும் போது அவற்றை முறியடிப்பதற்கான சூழ்ச்சிகளை இடையறாது செய்து கொண்டேயிருப்பர். இன்று வளர்முக நாடுகள் அனைத்தும் போசாக்கு, அடிப்படைச் சுகாதாரம், ஆரம்பக்கல்வி, குடும்பத்திட்ட சேவைகள், சுத்தமான நீர், பாதுகாப்பான வடிகால் ஆகியவற்றிற்குச் செலவிடும் 440,000 மில்லியன் டொலர்களில் 50,000 மில்லியன் டொலர்கள் மட்டுமே 80 சதவீதமான மக்களைக் கொண்ட கிராமங்களிற்கும் நகர்ப்புற சேரிகளிற்கும் ஒதுக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சக்கொடுமைக்கு உட்பட்ட பரம ஏழைகளிற்குச் செயலாற்ற வேண்டிய கட்டாயத்தைக் கொண்ட வளர்முக நாடுகளின் அரசுகள், செல்வச் செழிப்பு மிக்க சீமான்களுக்கே பொதுநிதி அனைத்தையும் செலவிடுகின்றன. இந்தியாவில் செல்வ வளமிக்க பத்து சதவீத மக்களிற்கு சேவையாற்றும் வைத்தியசாலைகளிற்கு சுகாதாரத்துறைச் செலவினத்தில் 75 சதவீதம் ஒதுக்கப்படுகின்றது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் கல்விச் செலவினத்தில் 60 சதவீதத்தைக் கற்றவர் களாகவுள்ள 5 சதவீத மக்களே பெறுகின்றார்கள். நீர் விநியோகத்திற்கான செலவினத்தில் 90 சதவீதமும் நகர்புற மக்களிற்கே செலவிடப்படுகின்றது.

மொம்பாஸாவிற்கும் நைறோபிக்கும் இடையேயான மிகவும் முக்கியமான வீதி படுமோசமான நிலையிலிருக்க, கென்யா 90 ·மில்லியன் டொலர்கள் கடன் பெற்றுத் தனது மூன்றாவது சர்வதேச விமானத்தளத்தை எல்டொனெற்றில் நிர்மானிக்கின்றது. சிறீலங்காவின் போருக்கான செல வினத்தை விடக்குறைந்த தொகையே சுகாதாரம், கல்வி, நீர்வழங்கல், வடிகால் அமைப்புகளுக்குச் செலவிடப் படுகின்றது. மொத்தத் தொழில் வலுவில் 65 சதவீதமானோர் விவசாயிகளாக இருக்கையில் இந்திய அரசு விவசாய விரிவாக்கத்திற்கு தன் மொத்தச் செலவினத்தின் ஆறு சதவீதத்தையே ஒதுக்கியுள்ளது.

வளர்முக நாடுகளின் சிறுவர்கள் அனைவரிற்கும் போசாக்கு அளிக்கவும் ஆரம்பக் கல்வியைப் புகட்டவும்,மக்கள் அனைவரிற்கும் குடும்பத்திட்ட சேவைகள், சுகாதார நலன் பேணல், சுத்தமான குடிநீரும் பாதுகாப்பான வடிகாலும் உருவாக்கல் என்பவற்றை நிறைவு செய்யவும் தேவைப்படும் முதலீடு ஆண்டிற்கு 30,000 மில்லியன் டொலர்கள் மட்டுமே என ஐக்கிய நாடுகள் சிறுவர் நிருபம் மதிப்பிடுகின்றது. ஏற்கனவே உள்ள செலவினங்களை நியாயமான முறையில் பங்கீடு செய்வதன் மூலமாகவே வளர்முக நாடுகள் அனைத்தும் முழு மக்களினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

உதவி வழங்கும் நாடுகளினதும் உதவி பெறும் நாடுகளினதும் தனிப்பட்ட சொந்த நலன்களில் அக்கறை கொண்டவர்கள் இருப்பதனால்தான் பிரச்சினைகள் மேலும் சிக்கலாகின்றன. அரசாங்க செலவினங்களில் 50 சதவீதமும் வறுமையை ஒழிப்பதற்கு அத்தியாவசியமாக உள்ள நடைமுறைகளிற்கு ஒதுக்கப்படுமேயானால் ஒரு தசாப்த காலத்திற்குள் உலகினின்றும் வறுமையை விரட்டிவிட முடியும்.

## ஏழ்மை வளருகின்றது.

உலகின் மொத்தத் தேசிய உற்பத்தி கடந்த பதினைந்து ஆண்டுகளில் 40 சதவீதத்தினால் கூடிய அதேவேளையில் வறியோரின் எண்ணிக்கையும் 17 சதவீதத்தினால் பெருகியுள்ளது. இக்காலத்தில் 1000 மில்லியன் மக்களினது தலைக்குரிய வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் பலவும், தென் சகாரா நாடுகளில் ஏறத்தாழ அனைத்துமே கடந்த பத்தாண்டுகளாக தமது பொருளாதாரத்தில் வீழ்ச்சியையே கண்டு வருகின்றன. கொலம்பியாவில் நவீன சந்தைப் பொருளாதார வளர்ச்சி சென்ற ஆண்டு மட்டும் 230,000 விவசாயிகளை நிலமற்றோராக்கி கிராமங்களிற்கே விரட்டிவிட்டது. கடந்த ஆறு ஆண்டுகளின் 40 மில்லியன் ஏழைகளுக்கு 22 புதிய கோடீஸ்வரர்களை மெக்ஸிக்கோ உருவாக்கியுள்ளது. பிறேசிலின் விவசாய நிலத்தின் 44 சதவீதத்தை ஒரு சதவீதமான விவசாயிகள் அபகரித்துக்கொள்ள 15 மில்லியன் விவசாயிகள் நிலமற்றோராக உள்ளார்கள். ஆர்ஜன்டீனாவில் தொழிலின்மை 18.6 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. சில்லியின் எந்த நகரினின்றும் பத்து நிமிடங்கள் வெளிநோக்கி பிரயாணம் செய்தால் தூசியும் கிறவலும் நிறைந்த வீதிகளையும், மரப்பலகைகளினால் அமைக்கப்பட்ட சிறு சிறு குடிசைகளையும் ஒவ்வோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசைகளிலும் பத்திற்கு மேற்பட்ட மக்களையும் காணலாம்.

எத்தியோப்பிய தலைநகரான அடிஸ்அபாபாவின் 400,000 மக்கள் வீதிகளில் தூங்குகிறார்கள். படிப்பறிவும் எழுத்தறிவுமற்ற முன்னாள் போர் வீரர்கள் தொழிலின்றி ஆயுதங்களுடன் வீதிகளில் திரிகிறார்கள். தென்னாபிரிக்காவின் தொழில் வலுவில் 40 சதவீதத்தினால் தொழிலற்றுள்ளபோது இவ் எண்ணிக்கை ஆண்டிற்கு 400,000 னால் அதிகரித்து வருகின்றது. கானாவின் ஏற்றுமதி வருமானத்தில் 35 சதவீதம் எரிபொருள் இறக்குமதிக்கு செலவிடப்படும் வேளையிலே பெண்ணின் கருவளம் 8 ஆக உலக உச்சத்தில் காணப்படுகின்றது. பாக்கினாகஸேதவின் தேசிய வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கும் அதன் சர்வதேசக்கடனுக்கும் அதற்கான வட்டிக்குமாக ஒதுக்கப்படுகின்றது.

நைஜீரியாவின் உணவு இறக்குமதிக்கான செலவினம் 2000 மில்லியன் டொலர்களையும் மிஞ்சிவிட்டது. ஆபிரிக்காக் கண்டத்தினது தலைக்குரிய உணவு உற்பத்தி கடந்த 15 ஆண்டுகளிலும் 42 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வோரின் சதவீதம் எல்லா நாடுகளிலும் 70 சதவீதத்திற்கும் மேலாகவுள்ளது. 2.5 மில்லியன் ஆபிரிக்கச் சிறுவர்கள் அகதிமுகாம்களிலும் வீதிகளிலும் வாழ்கிறார்கள். சிறுமிகளில் 30 சத வீதத்தினரும் சிறுவர்களில் 35 சத வீதத்தினருமே பாடசாலைக்குச் செல்கிறார்கள்.

35 ஆண்டுகளிற்கு முன் உலகப் பொருளாதாரத்தில் நான்கு சதவீதத்தை மட்டுமே கொண்டிருந்த ஆசிய நாடுகள், இன்று 25 சதவீதத்தைத் தமது பங்காக்கிவிட்ட போதிலும் இவ்வளர்ச்சி முழுவதிலும் மிகச்சிறு பங்கினரான செல்வந்தர்களைச் சென்றடைந்ததே யொழிய வறியவர்களிற்கு எதையுமே செய்துவிடவில்லை. சீனாவில் ஆண்டிற்குப் பதினைந்து மில்லியன் மக்கள் போதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமான மின்மையால் கிராமங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 15 ஆண்டுகளில் 3.9 மில்லியன் கெக்டேயர் பயிர்செய் நிலம் கைவிடப்பட்டோ, குடியிருப்பாகியோ, தொழிற்சாலை விரிவாக்கத்திற்கோ மாற்றப்பட்டுள்ளது. 100 மில்லியன் மக்கள் ஆண்டுக்குத் தலைக்குரிய வருமானமாக 1000 டொலர்கள் பெற 70 மில்லியன் மக்கள் 50 டொலர்கள் மட்டுமே பெறுகிறார்கள்.

மலேசியாவின் பொருளாதாரம் கடந்த எட்டு ஆண்டுகளாக சராசரி எட்டு சதவீதத்தினால் வளர்ச்சி பெற்று வருகின்ற போதிலும் அதன் வெளிநாட்டுக் கடன் ஆண்டுக்கு 4640 மில்லியன் டொலர் களாகியுள்ளது. 10,000 மில்லியன் டொலர்களை வெளிநாடுகள் சிலவற்றில் முதலீடு செய்துள்ள தென்கொரியாவின் தலைநகரான சியோலில் 2 மில்லியன் மக்கள் அடிப்படை வசதிகளற்ற சேரிகளிலேயே வாழ்கிறார்கள். இந்தியாவில் மொத்தத் தேசிய உற்பத்திகளில் 10 சதவீதத்தையும் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களே உற்பத்தி செய்கிறார்கள். பாகிஸ்தானின் கல்வியறிவு 60 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கையிலே தேசிய வருமானத்தின் 20 சதவீதத்தைப் பாதுகாப்பிற்கு ஒதுக்கி வருகின்றது. சவுதியரேபியாவின் மொத்தச் செல்வத்தில் 40 சதவீதத்தை அரச பரம்பரையைச் சேர்ந்த 200 குடும்பங்கள் தமதாகக் கொண்டுள்ளன.

## செல்வந்த நாட்டு ஏழைகள்

நாளுக்கு நாள் பெருகிவரும் தொழிநுட்ப சாதனைகளும், விரிவுற்றுவரும் வருமான இடைவெளியும் தனிப் பெற்றோரைக் கொண்ட குடும்ப எண்ணிக்கையின் அதிகரிப்பும் தொழில்மய நாடுகளின் கீழ்வகுப்பு மக்களின் எண்ணிக்கையைப் பெருக்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>ஐக்கிய அமெரிக்கா மக்களும் வருமானப் பகிர்வும்</u>

| [illegible] | வருமானம் |
|---|---|
| 20% | 2..9% |
| 20% | 7.0% |
| 20% | 13.9% |
| 20% | 21.5% |
| 15% | 19.4% |
| 5% | 35.3% |

ஐக்கிய அமெரிக்காவின் மேல் 20 சதவீதத்தினரின் சராசரி வருமானம் 1986ல் 73,754 டொலரிலிருந்து இன்று 105,845 டொலர்களாகி இருக்க கீழ் 20 சதவீதத்தினரின் சராசரி 7,702 டொலரிலிருந்து 7,762 டொல்களாக மட்டுமே மாற்றம் பெற்றுள்ளது. இதுகடந்த பத்தாண்டு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைத்தாங்கும் வலுவை இல்லாது செய்துவிட்டது. இதன் தனிப் பெற்றோரைக் கொண்ட குடும்பங்களின் சதவீதம் கடந்த 35 ஆண்டுகளில் 3.1 சதவீதத்திலிருந்து 36.5 சதவீதமாக விரிவுற்றுள்ளது.

மேற்கு ஐரொப்பிய நாடுகளின் பொருளாதாரம் கடந்த 15 ஆண்டுகளில் ஆண்டுச் சராசரியாக 1.5 சதவீதத்தினால் வளர்ச்சி பெற்று வருகின்ற வேளையில் 6 மில்லியன் சிறுவர்கள் உத்தியோகபூர்வ ஏழ்மை மட்டத்திற்கு கீழே தள்ளப்பட்டுள்ளார்கள். ஐக்கிய இராச்சியத்தின் தேசிய வருமானத்தில் அரைப்பங்கிற்கும் சற்றுக் குறைவான தொகையைச்சம்பாதிக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று தசாப்த காலத்தில் இரு மடங்காக அதிகரித்துள்ளது.கடந்த சில மாதங்களாக பிரானஸ், இத்தாலி, ஜேர்மனி என படிப்படியாக விரிவுற்றுவரும் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் குறிப்பிட்ட ஒரு தொகையினரது சமூக பொருளாதார முன்னேற்றம் மறுக்கப்பட்டதன் விளைவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருகிவரும் தொழிலற்ந்றோர்.**

| நாடு | பொருளாதார வளர்ச்சி | தொழிலற்றோர் |
|---|---|---|
| ஸ்பெயின் | 2.2% | 22.0% |
| பிரான்ஸ் | 1.3% | 12.5% |
| இத்தாலி | 1.2% | 12.1% |
| யப்பான் | 3.7% | 3.4% |
| ஜேர்மனி | 2.1% | 9.4% |
| ஐக்கியராச்சியம் | 1.1% | 10.1% |

யப்பான், ஜேர்மனி தவிர்ந்த ஏனைய தொழில்மய நாடுகள், வளர்முக நாடுகளின் கடனைவிட இருபது பங்கு அதிகமான கடனாளிகளாக உள்ளன. இவற்றினது பொருளாதார மந்தவளர்ச்சி எதிர்காலத்தில் மிகப்பெரும் பிரச்சினைகளிற்கு இட்டுச் செல்லும் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. தொழில்மய நாடுகளில் மட்டும் 34 மில்லியன் வாலிபர்கள் தொழிலற்றோராகவும், இதைவிட இரு பங்கு கூடியவர்கள் தற்காலிக தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள்.

## மாறிவரும் அரசுகள்

நூற்றாண்டை நிறைவு செய்யும் வேளையிலே, பொருளாதார சமூக அமைப்பின் கைத்தொழிற் புரட்சி ஏற்படுத்திய அதிர்வைவிடப் பலமான எரிமலைச் சீற்றம் போல் சந்தைப் பொருளாதார அமைப்பு இன்று வளர்ந்து வருகிறது. தொழிநுட்பத் துறையின் புரட்சியாளர் உருவான தொடர்பு ஊடகங்கள், விரைவுற்றுச் செல்லும் உலக வர்த்தகங்கள், புதிதாக எழுச்சி பெற்று வரும் பிராந்தியச்சந்தைகள், முதலீட்டுக் கம்பனிகளும் பங்குச் சந்தையும் கொண்டுள்ள அபரிதமான வளர்ச்சி . என்பன பொருளாதாரத் தடைகளையெல்லாம் தூக்கி வீசி வருகின்றது. மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்தியை இனி அமெரிக்கக் கம்பனிகளிடமே விட்டுவிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மூலை முடுக்குகள் எங்கும் கொக்கோ கோலா நிரம்பி வழிகிறது.உலகின் எந்தத் தளத்திலும் டெல்டா விமானம் தரையிறங்க முடிகிறது. எனவே அவையே அபிவிருத்தி உதவிகளிற்குப் பொருத்தமான நிறுவனங்கள் என்ற அமெரிக்க சபாநாயகரின் கூற்று பலதேசியக் கம்பனிகளின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

ஐக்கிய அமெரிக்காவைக் காட்டிலும் இரு பங்கும், மேற்கு ஐரோப்பாவைப் போல் மூன்று பங்கும் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற்று வரும் கிழக்காசியாவின் போக்கும் ஜனநாயக அமைப்பினுள் புகுந்துவிட்ட லத்தீன் அமெரிக்க நாடுகள் சந்தைப் பொருளாதாரத்தைத் தழுவி நான்காவது முகாமாக உருவாகி வருவதும் உலகின் செல்வ வளம் படிப்படியாக வளர்முக நாடுகளை நோக்கி இடம் பெயர ஆரம்பித்துள்ளமையைக் காட்டுகிறது. உலகவங்கியின் மதிப்பீட்டின்படி, 2020ம் ஆண்டிலே உலகிலுள்ள பொருள்வள நாடுகள் பதினைந்தில் சீனா, கொரியா, இந்தோனேசியா, இந்தியா உட்பட ஒன்பது நாடுகள் தற்போதைய வளர்முக நாடுகளிலேயே காணப்படும். இந்நிலையில் வளர்முக நாட்டு அரசுகள் சில ஏழைகள்பால் காட்டி வருகின்ற அக்கறையும், தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கின்ற சொற்திட்டங்களும் நம்பிக்கை தரும் வகையில் அமைந்து வருகின்றது. மக்களிலும் சிறுவர்களிலும் முதலீடு செய்வதன் மூலம் வறுமையைக் காணலாம் என்ற யதார்த்த பூர்வ உண்மையை கொரியா, சீனா, தாய்வான், இந்தோனேசியா, சில்லி போன்ற நாடுகளின் அண்மைக்கால முன்னேற்றங்கள் சுட்டிக் காட்டுகின்றன. நிலச் சீர்திருத்தக் கொள்கையை உள்ளீட்டு வளங்களை அதிகரித்தும், உற்பத்திப்பொருட்களிற்கான உத்தரவாத விலையை நிர்ணயித்தும் வாழுமிடங்களில் வைத்தே ஏழைகளைக் கைதூக்கிவிட முடியும் என சீனா நிரூபித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய சிறுவர்

பதினைந்து ஆண்டுகளிற்கு முன்னரே சந்தைப் பொருளாதாரத்தை அறிமுகமாக்கிய சில்லி இன்று பிரமிப்பூட்டும் வகையில் தன் தேசிய சேமிப்பாக 25.6 சதவீத தேசிய உற்பத்தியைக் கொண்டதாகவும், வறியோர் சதவீதத்தை 29.6 என்ற கீழ்மட்டத்தில் பேணுவதாகவும் வளர்ந்துள்ளது. தென்கொரியா யப்பானைப் போன்று தனது முதலீட்டிற்கு அந்நிய நாடுகளைத் தேடி அலைகிறது. இந்தோனேசியா, மலேசியா, தாய்வான், இந்தியா, ஆர்ஜன்டீனா போன்ற நாடுகள் பல நம்பிக்கை தரும் வகையில் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு விளங்குகின்றன.

கிராமிய சிகிச்சை நிலையங்களில் அதிகளவு அக்கறை கொள்ளும் பொருட்டு மத்திய வைத்தியசாலைகள் மீது எந்தவித புதிய முதலீட்டையும் செய்யலாகாது ஸிம்பாபே அரசு பத்தாண்டுகளிற்குத் தடை விதித்துள்ளது. அனைவரிற்கும் ஆரம்பக் கல்வி என்ற இலக்கினை எட்ட இந்திய அரசு உயர் கல்விக்கான செலவீனத்தைக் குறைத்து கிராமப்புற முதலீட்டை அதிகரித்திருக்கின்றது. மலேசியாவில் சுகாதாரம் சம்பந்தமான கொள்கை இரண்டு தசாப்தகாலமாக ஏழைகளைக் கருத்திற்கொண்டே வகுக்கப்பட்டு வருகின்றது. கோஸ்ராறிக்காவின் சுகாதார செலவீன வழிப்படுத்தலினால் மிக வறியவர்களான 20 சதவீத மக்கள் மொத்த சுகாதார செலவினத்தில் 30 சதவீதத்தைப் பெறுகின்ற நிலை உருவாகியுள்ளது.

## மனம்மாறிய செல்வந்தன்

வல்லரசுக்களின் கெடுபிடி யுத்தம் ஓய்ந்து, எதிர்கால உலக வறுமை, சனப்பெருக்கம், சுற்றாடற் சீரழிவு ஆகியவற்றில் வேரூன்றிவிட்ட புதிய அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி நிற்கும் வேளையிலே தொழில்மய நாடுகளும் வளர்முக நாடுகளுடன் புதியதொரு உறவினைக் கட்டியெழுப்புவதற்கு முன்வந்துள்ளன. தாம் எவ்வாறு இருக்க வேண்டுமென இதுவரை காலமும் சிந்தித்த தொழில்மய நாட்டு மக்கள் இன்று உலகம் எவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டுமென்று யோசிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். தொடர்புத் துறையில் ஏற்பட்டு வரும் மாபெரும் முன்னேற்றத்தின் காரணமாக இச் சிந்தனை முன்னரிலும் பார்க்க மிக்க கூடுதலான மக்களைச் சென்றடைகின்றது.

பொருளாதார வாரியாக முன்னேற்றமடைந்த அனேகமான எல்லா நாடுகளிலும் இன்றைய நுகர்வுப் போக்குகளும் கழிவுச் சேர்க்கைகளும் சுற்றாடலைச் சீர்குலைத்து வருவதையும் வளர்முக நாடுகளின் குடிப்பெருக்க வேகம் மேலும் தீங்கை எதிர்காலத்தில் ஏற்படுத்திவிடும் என்றும் அச்சத்தைத்தோற்றுவித்துள்ளது. இதுவரை ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தியானது பெரும்பாலான மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை என்று தொழில்மய நாட்டு மக்கள் கருதுகின்றார்கள். சுமாரான வசதியுடன் வாழ்பவர்கள் கூட, சிறுவர்கள் மத்தியில் பெருகிவரும் வன்முறைகளிற்கும் சமூகவிரோத நடவடிக்கைகளிற்கும் மாற்றுவழி தேடி மகிழ்ச்சியற்றே காணப்படுகிறார்கள். ஒளிமயமானதாக விளங்குமென்று ஒரு காலத்தில் கற்பனை செய்த எதிர்காலம் இருள் ஒன்றாக மாறி வருகிறதேயென மக்கள் ஏங்குகின்றார்கள்.

கடந்த சில ஆண்டுகளில் லத்தீன் அமெரிக்கா, தெற்கு ஆபிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா ஆகியவற்றிலும் முன்னாள் சோவியத்தொன்றியம், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சிறிதளவான வன்செயல்களுடன் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டமை, பழைமையின் காவலர்களிற்கு முன்னரைப் போன்ற அடக்கு முறைகள் எதிர்காலத்தில் வேகாது என எச்சரிக்கை விட்டுள்ளது. இந்நிலையில்தான் செல்வந்தர்களின் சிந்தனையிலும் செயலிலும் ஏழை நாடுகளின் மேலும் ஏழை மக்கள்பாலும் சிறிது அக்கறை பிறந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய அமெரிக்கா
## சிறுவர்களுக்கான திட்டங்கள் அரச ஆதரவை எந்தளவிற்குக் கொண்டிருக்க வேண்டும்

| திட்டங்கள் | மிகவும்உயர்வு | முக்கியமானது | தாழ்வானது |
|---|---|---|---|
| நோய்களுக்கான இலவசத் தடுப்புமருந்துகள் | 67% | 26% | 05% |
| தேவைப்படுவோருக்கான போசாக்குத்திட்டம் | 61% | 32% | 06% |
| சகல சிறுவர்களுக்கும் சுகாதாரக் காப்புறுதி | 54% | 29% | 15% |
| வறியபெற்றோர் தொழில்புரியும் பொருட்டு சிறுவர் காப்பகங்கள் | 52% | 33.3% | 12% |
| வேண்டப்படாதகருத்தரிப்பை பத்தவிர்ப்பதற்காகஇளைஞர்களிற்கானஉதவிகள் | 51% | 30% | 17% |
| கருவுற்ற தாய்மாருக்கான நலன் தரும் திட்டங்கள் | 49% | 36% | 13% |
| பாடசாலைக்கு முன்னான கல்விவசதிகள் | 45% | 34% | 20% |

சகல மாநிலங்களையும் சேர்ந்த 6000 மக்களிடம் தொலைபேசி மூலம் மேற்கொண்டகருத்துக் கணிப்பின் விளைவு

## விடியலை நோக்கி

சிறப்பான எதிர்காலத்திற்கு அத்திவாரமாக விளங்கக்கூடிய பணி எல்லாச் சிறுவர்களதும் உடல், உள, உணர்வு விருத்தியைப் பேணி வளர்ப்பதேயாகும். முன்னேற்றத்தின் தொடக்கமும் முடிவும் பொருளாதார மேம்பாடு, சமூக ஒற்றுமை, அரசியல் உறுதிப்பாடு ஆகியவற்றின் அத்திவாரமும் இதுவே. இந்தப் பணியில் தெரியப்படாதவரை மனுக்குலத்தின் அடிப்படையான நெடுங்காலப் பிரச்சினைகள் யாவும் அடிப்படையான பிரச்சினைகளாகவே தொடர்ந்தும் நிலை பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களின் தேவைகளை மிகக்குறைந்த செலவில் பூர்த்தி செய்வதற்கான வசதிகளும் அதற்கான ஆற்றலும் எம்முன் உள்ள நிலையில் நாம் தோல்வியுறுவோமானால் மனுக்குலம் ஒன்றுமே விடிவைக்காண முடியாது.

சிறுவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதானது சமூக சேவைகளில் மட்டும் சார்ந்ததன்றி, அவர்களது பெற்றோருக்கு தொழில்களும் வருமானமும் கிடைக்கச் செய்வதிலும் தங்கியுள்ளது. காணிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், சிறிய உற்பத்தியாளர்கள் மீது முதலிடுதல், பெருந்தொகையான வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற பெரு முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஆண்டிற்கு 30,000 மில்லியன் டொலர்கள் அதிகபணம் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதை இரட்டித்தாலும் கூட வரும் தொகை உலகில் வைன் மதுபானத்திற்கு செலவிடப்படும் தொகையே மும்மடங்காக்கிப் பார்த்தால் உலகம் சிகரெட்டிற்குச் செலவிடப்படும் பணத்திலும் குறைந்ததே.

இதற்கும் மேலாக இடையறாத அரசியல் ஈடுபாடும் திறமையான முகாமையும் தேவைப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பத்திற்கும் மேற்பட்ட முகவர் நிலையங்களும், சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, தென்கிழக்காசிய ஒன்றியம், தொண்டர் நிறுவனங்கள், உதவி வழங்கும் நாடுகளின் முகவர் அமைப்புக்கள், மனிதநேயம் மிக்க பெரியவர்கள், மக்கள் இயக்கங்கள், தேசியத் தலைமைகளும் அரசுகளும் எனப்பரந்தளவிலான ஆதரவு இப்பணிக்கு இன்று கிடைக்கும் நிலை மன அமைதியைத் தருகின்றது.

UNIVERSITY OF PERADENIYA
29 SEP 2008
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
29 SEP 2008
LIBRARY
615054
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERAD...
29 SEP 2008
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களே இன்று மிகவும் மூர்க்கமான போராளிகளாக உள்ளார்கள். தமது செயல்களின் விளைவுகள் பற்றிய நீதியின் பாற்பட்ட சிந்தனைகள் அவர்களிடம் இல்லை. ஒன்றைச் செய்யுமாறு அவர்களைப் பணித்தால் உடனடியாகவே அதனை மிகவும் நேர்த்தியான முறையில் நிறைவேற்றிவிடும் இயல்பு கொண்டவர்கள் என்கிறார் ஈஸ்தர் ஜுலுமா என்கின்ற சிறுவர் புனர்வாழ்வுத் தலைவர்.

சிறுவர்களின் தேவைகளையும் அவர்களது அடிப்படை உரிமைகளையும் அபிவிருத்தி சார்ந்த நடைமுறைகளின் முன்னணியில் வைத்துச் செயற்பட வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டு விட்டது. மனம்,உடல்,ஆளுமை என்பன விருத்தி பெறுகின்ற பாலியல் பருவத்திலே ஏற்படுகின்ற தற்காலிக இழப்புக்கள்கூட மானிட வளர்ச்சியில் ஆயுட்கால சேதத்தையும் விபரீதத்தையும் ஏற்படுத்தக் கூடியது என்பதை நாம் உணரவேண்டும். ஒரு குழந்தை இயல்பாக வளர்ச்சி அடைவதற்கும், தன் திறமை களுக்கு அத்திவாரம் இடுவதற்கும் ஒரேயொரு சந்தர்ப்பம் மட்டுமே உண்டு என்பதைப் புரிந்து கொண்டு, அந்த ஒரு சந்தர்ப்பத்தைக் காக்கும் பணிக்கு முன்னே வேறெந்த முன்னுரிமைகளும் குறுக்கிட அனுமதிக்கக் கூடாது.

நிலா பதிப்பகம்
நோர்வே



Digitized by Noolaham Foundation